
ஸ்ரீ க்ஷேத்திர தர்மஸ்தலம்



ஸ்ரீ மஞ்சுநாதஸ்வாமி துணை

ஸ்ரீ தர்மஸ்தல க்ஷேத்திரம்

ஸ்தல வரலாறும் மகிமையும்

எழுதியவர்

ஸ்ரீ தர்மஸ்தல க்ஷேத்திர சேவா பூஷண
ஸ்வாமி–பரமஹம்ஸ–சேஷாச்சார்யர்
அகில பாரத ஸாது சமாஜம்
கர்நாடக ராஜ்ய ஸ்தாபனத்தின்
மாஜி தலைவர், தர்மஸ்தலம்.

ஸ்ரீ தர்மஸ்தல சமஸ்தான வெளியீடு

விலை ரூ. 2-50

முதற்பதிப்பு : 1956
இரண்டாம் பதிப்பு : 1969
மூன்ரும் பதிப்பு : 1978

31-1

ஓம்

ஆசியுரை

ஸ்ரீ தர்மஸ்தல க்ஷேத்திர வரலாற்றைப்பற்றியும் அதன் மகிமையைப்பற்றியும் தமிழ்மொழியில் மூன்ருவது பதிப்பாக அச்சிட்டு தமிழ்நாட்டிலிருந்து இச்க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்யும் பக்தர்களின் உபயோகத்திற்காகவும் அவர்கள் இப்புராதன க்ஷேத்திரத்தைப் பற்றி நன்ருக புரிந்து கொள்வதற்காகவும் இப்புத்தகம் வெளியிடப்படுவது எனக்கு மிகுந்த சந்தோஷத்தை அளிக்கிறது.

இச்க்ஷேத்திரத்திலேயே, 28 வருஷகாலமாய் அத்யாத்ம சாதனைக்காக வாசம் செய்து கொண்டுவருபவரும், ஸ்ரீ க்ஷேத்திரத்தின் மேலும், ஸ்ரீ மஞ்சுநாதஸ்வாமியின் மேலும் அளவு கடந்த பக்தி வைத்திருப்பவரும், வயதிலும் எண்பத்தி எட்டு நிறைந்தவருமான ஞான நிஷ்டர்—ஸ்ரீ தர்மஸ்தல க்ஷேத்திர சேவா பூஷண ஸ்ரீ ஸ்வாமி பரமஹம்ஸ சேஷாச்சார்யா அவர்களால் இப்புத்தகம் எழுதப்பட்டது என்று கூற எனக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இதற்கு முன் வெளியிடப்பட்ட இரண்டு பதிப்புகளும் அவராலேயே எழுதப்பட்டவைகள்.

பழைய வரலாறுகளிலிருந்தும், பூர்வபத்ததி சம்பிரதாயங்களிலிருந்தும், இப்புராதன க்ஷேத்திரத்தைப்பற்றிய மகிமைகளையும் விபரங்களையும் நன்ருக ஆராய்ந்து சேகரித்து, அவைகளைச் சரியாகவும், உயர்ந்த முறையிலும் எழுதியிருப்பது மிகவும் போற்றத்தக்கதுமல்லாமல் பாராட்டத் தக்கதுவுமாகும்.

இதற்கு நான் அவருக்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆயுளாரோக்கியத்திற்காகவும் ஸ்ரீ மஞ்சுநாதஸ்வாமியிடம் பிரார்த்தித்துக் கொள்கிறேன்,

ஸ்ரீ தர்மஸ்தலம்

24-10-1978.

தர்மஸ்தல, வீரேந்திர ஹெக்கடே,
பீடாதிகாரி,
ஸ்ரீ தர்மஸ்தல க்ஷேத்திரம்.

முகவுரை

இப்புராதன க்ஷேத்திரம், புராதண சம்பந்தப்பட்ட ராமாயணம் மஹாபாரதம், ஸ்ரீமத் பாகவதம், முதலான பண்டை காலங்களில் சம்பந்தப்பட்டதாகவோ அல்லது வேதவியாசர் வஸிஷ்டர் விஸ்வாமித்திரர் முதலான மாஹாரிஷிகள் காலங்களில் சம்மந்தப்பட்டதாகவோ இருக்க வில்லையாயினும், சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், இந்த க்ஷேத்திரம் தெய்வீக சக்திக்குட்பட்டு, தெய்வீக சக்தி நிறைந்த தர்ம தேவதைகள், இந்த இக்ஷேத்திரத்தின் அதிபதியான திரு. ஹெக்கடே அவர்களை தங்கள் பிரதிநிதியாகக் கொண்டு இந்த ஸ்தலத்தை நிர்மாணித்ததுமல்லாமல் அவர் மூலமாகவே அநேக தர்ம காரியங்களை நடத்திக்கொண்டு வருகிறார்கள்.

இந்த க்ஷேத்திரத்தில் ஸ்ரீமான் ஹெக்கடே அவர்கள் ஸ்தானம் தெய்வாம்சம் பொருந்தியுள்ளது மல்லாமல் அவர் இங்கு நடக்கும் அநேக தேவாலய காரியங்களுக்கு இன்றி அமையாதவராயுமிருக்கிறார். ஆகையால் க்ஷேத்திரத்தைப் பற்றி எழுதும்போது ஆரம்ப காலமுதல் இன்று வரையில் இதை பரிபாலனம் செய்துக் கொண்டும், அபிவிருத்தி செய்துக் கொண்டும் வந்த ஒவ்வொரு ஹெக்கடே அவர்கள் வாழ்நாட்களைப் பற்றியும் அவரவர்கள் காலங்களில் நடந்த விசேஷங்களைப் பற்றியும் எழுத வேண்டியது அவசியமாயிருக்கின்றது.

கன்னடம் அல்லது ஆங்கிலம் தெரியாத பல்லாயிரக் கணக்கான தமிழ் நாட்டைச் சேர்ந்த யாத்ரீகர்களின் வேண்டுக்கோளுக்கிணங்கி, ஆங்கில மொழியில் அச்சிடப்பட்டிருக்கும் க்ஷேத்திரத்தைப் பற்றிய பிரதியிலிருந்து சில விபரங்களும், தற்சமயம் தர்மஸ்தல பீடாதிகாரியாயிருக்கும் ஸ்ரீமான் வீரேந்திர ஹெக்கடே அவர்களைக் கேட்டு தெரிந்து கொண்ட சில விபரங்களும், ஆக கிடைத்த விபரங்களைக் கொண்டு தமிழ் மொழியில் மொழி பெயர்த்து சிறிய புத்தகமாக அச்சிட்டு ஸ்ரீ மஞ்சுநாதஸ்வாமி கிருபையாலும் ஸ்ரீமான் வீரேந்திர ஹெக்கடே அவர்களின் ஆசியினாலும், அவர்களின் கட்டளைப்படியும் வெளியிட்டிருக்கின்றேன்.

தமிழ் மொழியில் இந்த க்ஷேத்திரத்தைப் பற்றி எழுதி அச்சிடுவது மூன்றாந்தடவையாகும். முதல் பதிப்பு 1956 ஆண்டிலும்

இரண்டாம் பதிப்பு 1969ம் ஆண்டிலும் அச்சிட்டு தமிழ் நாட்டி லிருந்து விஜயம் செய்யும் யாத்ரீகர்களுக்கு விநியோகம் செய்யப் பட்டது. அவர்கள் இதைப் படித்து புரிந்து கொள்ளும் பொருட்டு இம்மூன்று பதிப்புகளும் தமிழ் மொழியிலே எழுதும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததற்கு தான் மிகவும் பெருமையும், மன மகிழ்ச்சி யும் அடைகிறேன்.

தமிழ் நாட்டு அன்பர்கள் இப்புராதன புண்ணிய க்ஷேத்திரத் திற்கு விஜயம் செய்யவும், க்ஷேத்திரத்தின் பெருமையைப் பற்றி நன்ருகப் புரிந்து கொள்ளவும், ஸ்ரீ மஞ்சுநாத ஸ்வாமியின் கிரு பைக்கு பாத்திரமாகச் செய்யவும் இவ்வெளியீடு மிகவும், பயனுள்ள தாயிருக்குமென மனப்பூர்வமாக நம்புகிறேன்.

மொழி பெயர்ப்பிலும், நடை வசன பாவனைகளிலும் பிழை கள் இருக்கலாம். அவைகளைப் பொருட்படுத்தாமல், சாராம் சத்தை கிரஹித்துக் கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளு கிறேன்.

ஸ்ரீ தர்மஸ்தலம்
24-10-1978

ஸ்வாமி-பரஹம்ச
சேஷாச்சார்யா



பொருளடக்கம்

—:—

1.	க்ஷேத்திர அமைப்பு	1
2.	கோயில் உற்பத்தியும், பரம்பரை வம்சாவளியும்	3
3.	தற்சமயம் பீடாதிகாரிகளாயிருக்கும் திரு. வீரேந்திர ஹெக்டே அவர்கள்	20
4.	கோயில் அலுவல்களும். பூஜை முறைகளும்	33
5.	கோயிலுக்குச் செல்லும்போது அனுசரிக்க வேண்டிய முறைகள்	35
6.	யாத்ரீகர்களுக்கு வசதிகளும் அவர்கள் கவனிக்க வேண்டியவைகளும்	38
7.	சர்வ தர்ம சம்மேளனம்	41
8.	மனித ஜன்மத்தின் பிறப்பும் தீர்த்த யாத்திரையின் பயனும்	44
9.	தர்மஸ்தல க்ஷேத்திரத்தின் தனிப்பெருஞ்சிறப்பு	48
10.	வருடாந்திர திருவிழாக்கள்	49
11.	சேவைகள், பூஜைகள் கால அட்டவணை முதலியன	58

ஸ்ரீ தர்மஸ்தலம்

க்ஷேத்திர அமைப்பு

ஸ்ரீ தர்மஸ்தல க்ஷேத்திரம் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட மைசூர் (கர்நாடக) ராஜ்யத்திலே தென் கன்னடம் ஜில்லாவில் பெல்த்தங்கடி என்ற தாலூக்காவில் உள்ளது. தென்னிந்திய இரும்புப் பாதையைச் சேர்ந்த மங்களூர் என்ற ஸ்டேஷனிலிருந்து கிழக்கே சுமார் 46 மைல் தூரத்திலும் மங்களூர்–சார்மாடிகாட் என்ற பாதை யிலிருக்கும் ''உஜ்ஜிரே'' என்ற ஊரிலிருந்து சுமார் 6 மைல் தூரத்திலும் உள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைக் கும், அரபிக் கடலுக்கும் மத்தியில் இருக்கும் குறுகிய நில பாகமாகிய பரசுராம க்ஷேத்திரம் என்று சொல்லக் கூடிய புண்ணிய பூமியில் திலகம் போன்றது தர்மஸ்தலம்.

இந்த க்ஷேத்திரத்தைச் சுற்றிலும் சிறு சிறு மலைக் குன்றுகளும் நதிகளுமிருக்கின்றன வடபாகத்தில் ஓடும் நதிதான் முக்கியமான புண்ணிய தீர்த்தம். இதற்கு நேத்திராவதி என்று பெயர். உயர்ந்த மரங்கள் அடங்கிய அடர்ந்த காட்டுப் பிரதேசத்தின் மத்தியில் இச்க்ஷேத்திரம் ரமணீயமான இயற்கை காட்சிகளிடையே அழகாக அமைந்திருக்கிறது. அதிக ஜனப்பழக்கமில்லாத ஒரு சிறு கிராமத்தைப் போலிருக்கிறது இங்கு வசிப்பவர்கள் பெரும்பாலோர் தேவஸ்தானத்தில் வேலை செய்பவர் களும், தேவஸ்தான சம்பந்தப்பட்ட ஜமீன் தோட்டங்கள் இவைகளில் வேலை செய்பவர்களும், மற்றபடி கடைகள் வைத்துக்கொண்டு வியாபாரம் செய்பவர்களுமே ஆவர். சீதோஷ்ணம், கோடை காலத்தில் அதிக வெப்பமும், குளிர் காலத்தில் அதிக குளிரும், மழை காலத்தில் மத்திய மாகவுமிருக்கும்.

இங்கே விளையும் தானியங்கள், நெல், தேங்காய், பாக்கு இவைகளே. மற்ற தேவையான இதர பொருட்கள், சமீபத்திலுள்ள மங்களூர், பண்ட்வால், சிக்க மகளூர் முதலிய நகரங்களிலிருந்து தருவித்துக்கொள்ளப்படுகிறது.

மங்களூர், கார்கால், புத்தூர், சிக்கமகளூர், ஹாசன், கடூர் மற்ற கர்நாடகத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் பஸ்கள் நிறைய வருகின்றன இந்தியாவின் எல்லா பாகத்திலிருந்தும் இச்க்ஷேத்திரத்திற்கு ரயில் மூலமாகவும் பஸ் மூலமாகவும் கஷ்டமின்றி வரலாம்.

தர்மஸ்தலம் என்றால் தர்மங்கள் நடக்கும் ஸ்தலம் என்று பொருள். பெயரளவில் மட்டுமின்றி கிரியாம்சயிலே இக்காலத்தில் பிரதி தினமும் தர்ம காரியங்கள் நன்கு தடையின்றி நடந்துகொண்டு வருகின்றன. இச்க்ஷேத்திரத்தைக் கருணா மூர்த்திகளான தர்மதேவதைகள் ''எள்ளுக்குள் எண்ணெய்'' போல காத்துவருவதால், யாத்ரீகர்கள் மிகவும் பயம், பக்தி, சிரத்தையுடனும், ஆசாரம், நியம், சுத்தம், ஒழுக்கம், பரிசுத்த மனப்பன்மையுடனும் இங்கு இருக்கவேண்டும். கர்நாடக மாநிலத்தில் அநேகர் இச்க்ஷேத்திரத்தின் முழு பெயரை சொல்லக் கூட பயப்படுவார்கள், சிலர் ''ஸ்தலம்'' என்றும், சிலர் ''நதிக்கு அப்புரம்'' என்றும் சொல்வதுண்டு. எங்கு பார்த்தாலும் தெய்வீக உணர்ச்சியும், சாத்வீகமான பாவனைகளும், தூய பரிசுத்த காட்சிகளும் நிறைந்து இருக்கும்.

இச்க்ஷேத்திரத்துக்கு சொந்தக்காரரும் அதிபதியும் ஸ்ரீமான் ஹெக்கடே அவர்கள் தர்மதேவதைகளின் பிரதிநிதியாகையால், ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வர ஸ்வாமியின் அனுக்ரஹத்திற்கும், அன்பிற்கும் பாத்திரமானவரானபடியாலும், சதா சர்வகாலமும் பல வகையில் அவன் தொண்டையே செய்து கொண்டு வருவதாலும் அவர்

ஸ்தானமும் இச்க்ஷேத்திரத்தில் மிக முக்கியத்துவமும், சக்தியுடையதுமாகவும் உள்ளது. அவர் வாயிலிருந்து வரும் வார்த்தைகள், ஆசிகள், தெய்வீக சக்தி பொருந்தினவைகள். இச்க்ஷேத்திரத்திற்கு வரும் யாத்ரீகர்கள், க்ஷேத்திரவாஸம், ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வர ஸ்வாமி தரிசனம் நேத்திராவதி ஸ்நானம் செய்வது மல்லாது ஸ்ரீமான் ஹெக்கடே அவர்களையும் தரிசித்து அன்னார் ஆசியையும் பெற்றுச் செல்லவேண்டும். இவை க்ஷேத்திர வழக்கமாக தொன்றுதொட்டு நடந்து கொண்டு வரும் சம்பிரதாயமான வழக்கங்களாகும்.

கோயில் உற்பத்தியும் பரம்பரை வம்சாவளியும்

இச்க்ஷேத்திரத்தின் பழைய பெயர் ''குடுமபுரம்'' என்றிருந்தது. புராதன காலத்திலிருந்தே இது ஒரு ஜெயினத் தலைவரின் ஆதிக்கத்துக்குட்பட்டு வந்து கொண்டு இருக்கிறது. இங்கே பல மகான்கள், ஞானிகள், சித்த புருஷர்கள் தவம் செய்து மோட்சம் அடைந்ததால் இச்க்ஷேத்திரத்திற்கு ஒரு விதமான தெய்வீகத்தன்மையும், சக்தியுமேற்பட்டது. சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னால் பரமண்ண ஹெக்கடே, அம்முதேவி பெல்லால்த்தி என்பவர்கள் ஆட்சி செய்துகொண்டிருந்தார்கள்.

இவர்கள் காலத்தில் சில தெய்வீக புருஷர்கள் யானை, குதிரை இவைகளின் பேரில் ஏறிக்கொண்டு வடகிழக்கு திசையிலிருந்து ஸ்ரீமான் ஹெக்கடே அவர்கள் வாசம் செய்து கொண்டிருக்கும் ''நெல்லியாடி பீடு'' என்ற இடத்திற்கு வந்தார்கள். ஹெக்கடே அவர்கள் வழக்கம் போல் வந்த அதிதிகளுக்கு வேண்டிய உபசாரம் செய்து, தன்னாலென்ன ஆகவேண்டுமென அவர்களிடம் வேண்டிக் கேட்டுகொண்டார். மனித ரூபத்தில் வந்த தெய்வீக புருஷர்கள் ஹெக்கடே அவர்களின் மனதைச் சோதிப்

பதற்காக அன்ஞூர்வாசம் செய்து கொண்டிருக்கும் ''நெல்லியாடிபீடு'' என்ற இடத்தை தங்களுக்கு கொடுத்துவிடும்படியும், அதில் தாங்கள் வசிக்கப் போவ தாயும் கேட்டனர்.

இது ஹெக்கடே அவர்களுக்கு கொஞ்சங் கூட எதிர் பாரத கோரிக்கையாக தோன்றிய போதிலும், இவர்கள் சாதாரண மனிதர்கள் அல்ல, தெய்வீக புருஷர்கள் என்பதை ஊகித்துக் கொண்டு அவர்கள் கேட்டப்படி நெல்லியாடிபீடுவை அவர்களுக்குக் கொடுத்து மேற் கொண்டு நடக்கவேண்டிய எல்லா காரியங்களுக்கும் தான் உதவி செய்ய தயாராயிருப்பதாயும் வாக்குறுதி கொடுத்தார்.

இது தெய்வீக புருஷர்களுக்கு அபரிமிதமான மகிழ்ச்சி அளித்தது. ஹெக்கடே அவர்களின் தியாக மனப் பான்மையையும், தாராள தரும குணத்தையும் வெகுவாக புகழ்ந்து ஹெக்கடே அவர்களிடம் கீழ்க்கண்டவாறு கட்டளையிட்டனர் :—

ஹெக்கடே அவர்களே நாங்கள் மஹேஸ்வரனின் கட்டளைக்குட்பட்ட தர்மதேவதைகள், எங்களால் அநேக விதமான அபூர்வ காரியங்கள் சாதிக்க முடியும்.''

''இச்க்ஷேத்திரத்தை ஒரு பெரிய புண்ணிய ஸ்தல மாகவும். சுற்றுப்புறமிருக்கும் கிராமவாசிகள் இதை சிறந்த பயபக்தியுடன் நோக்கும்படி செய்யப் போகின் ரோம். அவரவர்கள் பக்தி சிரத்தைக்கு தகுந்தபடி அவ ரவர்கள் பக்தி கோரிக்கைகளும் பிரார்த்தனைகளும் மனோ பீஷ்டங்களும் நிறைவேற நாங்கள் உதவி செய்வோம், அதற்கு பக்தர்கள் ஏராளமாக ''கோரிக்கை காணிக்கை'' கொண்டு வந்து உங்களுக்குச் செலுத்த நாங்கள் பக்தாதி

கள் மூலமாகப் முயற்சி படுவோம். எங்கள் ஐஸ்வர்யத்தை யாரும் அளவிட முடியாது, உங்களை எங்கள் முக்கிய பிரதிநிதியாக நியமிக்கிறோம், உங்கள் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையும் பலிதமாக நாங்கள் உங்களுக்கு அபூர்வ சக்தியைத் தருகிறோம் பக்தர்களின் அநேகவிதமான துயரங்கள், குறைகள், கஷ்டங்கள் எல்லாம் நிவர்த்தியாவதிலிருந்து, இச்க்ஷேத்திரத்தின் புகழ் பல இடங்களிலும் பரவி இதன் கீர்த்தி உயரப் போகின்றது. நீங்கள் கடவுளின் உண்மை பக்தனாக யிருந்து. அவன் சேவைகளைச் சரியாக செய்து கொண்டு வந்தால் உங்களுக்கு நீண்ட ஆயுளும் ஐஸ்வரியமும் கொடுப்பது மல்லாமல் உங்களை எங்கள் அருமை குழந்தை யைப்போல் காத்துவருவோம். இந்த கைங்கர்யத்திற்கு உங்களுக்கு உதவி செய்வதற்காக நான்கு நபர்களை ஏற்படுத்திக் கொள்ளவும். வரும் யாத்ரீகர்களுக்கு வேண்டிய ஆகார வசதி, இட வசதி, மற்ற தேவையான வசதிகள்எல்லாம் செய்து கொடுக்கவும்''.

''ஜெயினபஸ்தியிலிருக்கும் ஸ்ரீ சந்திரநாதஸ்வாமி சேவைகளையும் சரியானபடி செய்து வரவும். இவைகள் எல்லாம் நாங்கள் சொலியபடி செய்யத்தவறினால், அதன் தோஷம் உங்களை பாதித்து நீங்கள் துயரத்தை அனுபவிக்கும்படி நேரும். உண்மையான பக்தியுடனும், சிரத்ததையுடனும் ஆண்டவனுக்கும், எங்களுக்கும் பக்தாதிகளுக்கும் ஸேவை செய்தால் உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து போதுமான ஐஸ்வரியத்தைக் கொண்டு வந்து கொடுப்போம். மனம் தளர வேண்டாம். தைரியமாகவும், பயமில்லாமலும் பணியாற்றுவீராக ''

மேற்கண்டவாறு சொல்லிவிட்டு தர்மதேவதைகள் மறைந்து விட்டனர். இவைகளைச் செவியுற்ற ஹெக்கடே அவர்கள் ஆச்சரியமும் ஆனந்தபரவசருமாயினர். சில

நாளான பிறகு தர்மதேவதைகள் ஹெக்கடே அவர்களின் கனவில் தோன்றி கீழ்கண்டவாறு கட்டளையிட்டனர்.

''நாங்கள் மறைந்துவிட்ட போதிலும் இங்கேயே தான் வசித்துக் கொண்டிருக்கிறோம் நாங்கள் வசிப்பதற்காக நெல்லியாடிபீடில் ஒரு கட்டிலும் ஊஞ்சலும் வைத்து 'பஞ்சபர்வம்' என்ற சடங்கைச் சரிவர நடத்திக்கொண்டு வரவும் நீங்கள் குடியிருப்பதற்காக 'பீடு' ஒன்று நாங்கள் குறிப்பிடுமிடத்தில் கட்டிக் கொள்ளவும், எங்களுக்காகவும் நாங்கள் குறிப்பிடுமிடத்தில் கோயில்கள் கட்டவும்.''

''அம்மன், கன்யாகுமரிக்கும் ஆலயம் கட்டவும் நாங்கள் விரும்பும் இவைகளையெல்லாம் சரிவர செய்து வைத்தால் உங்களுக்கு வேண்டியவற்றை எல்லாம் செய்து கொடுக்க நாங்கள் எப்போதும் உங்களுக்குத் துணையாகயிருப்போம். நீங்கள் தேவையான சமயத்தில் எங்களைக் குறித்து தியானம் செய்யவும் நாங்கள் உங்கள் குறைகளைத் தீர்த்து வைப்போம். எங்கள் சார்பில் உயர்ந்த மதத்தைச் சேர்ந்த இரண்டு நபர்களை நியமிக்கவும். உங்களுக்குச் சொல்லவேண்டிய விஷயங்களை அவர்கள் மூலமாகச் சொல்லி வருகிறோம். சில முக்கியமான விஷயங்களைப் பற்றி மட்டும் எங்கள் பிரதிநிதியான அன்னப்பாவின் மூலம் தெரியப் படுத்துவோம். பக்தியுடனும் சிரத்தையுடனும் நடந்து கொள்ளவும்.''

ஹெக்கடே அவர்கள் தர்மதேவதைகள் ஆணைப்படி அடுத்த தினமே ஆலயங்கள் கட்ட ஆரம்பித்து விட்டார் சில தினங்கள் கழித்து தர்ம தேவதைகள் அசரீரி வாக்கு மூலமாக அடியில் கண்டவாறு ஆணையிட்டனர் :—

''அம்மன், கன்யாகுமரியின் சன்னதிக்குப் பக்கத்தில் ஒரு லிங்கத்தை பிரதிஷ்டை செய்யவும், காசி

யிலிருந்து கொண்டு வரப்பட்டு இப்போது மங்களூரிலிருக்கும் கதிரே க்ஷேத்திரத்திற்கும் ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வர லிங்கத்தை நாங்கள் கொண்டு வந்து தருகிறோம்.''

அதே பிரகாரம் ஒருநாள் தர்மதேவதைகள் சொன்ன இடத்திலேயே ஒரு அழகான லிங்கம் பிரதிஷ்டை செய்திருப்பதைக் கண்டு ஹெக்கடே அவர்கள் ஆச்சர்மடைந்தார்கள். அந்த இடத்திலே ஆலயம் கட்டி, ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரர், தர்மதேவதைகள் இவர்களின் நித்திய பூஜை, ஸேவை முதலிய காரியங்களுக்காக தன் சொந்த ஆஸ்தியிலிருந்து சில பாகம் ஒதுக்கிவைத்தார்.

அன்று முதல் சுவாமி சன்னதியில் முறைப்படி பூஜை முதலியவைகள் நடைபெற ஆரம்பித்தன. க்ஷேத்திரத்தின் பிரதாபம் பல பாகங்களிலும் பரவ ஆரம்பித்தது மக்கள் தினம் தினம் ஏராளமாக வந்து சுவாமியை தரிசித்து, பக்தியை செலுத்த ஆரம்பித்தார்கள்.

பல ஹெக்கடேக்கள் இதே பிரகாரம் இச்க்ஷேத்திரத்தை நல்ல முறையில் ஆண்டு சென்றனர். ஹெக்கடே அவர்களின் சம்பிரதாயப்படி தந்தைக்கு பிறகு மகனே பட்டத்துக்கு வரவேண்டியவனுகின்ருன். மகன் இல்லை என்ருல் ''தத்து'' எடுத்துக்கொள்வதுண்டு. தந்தைக்குப் பிறகு மருமகன் பட்டத்துக்கு வரும் வழக்கம் கிடையாது. இம்முறையே தொன்றுதொட்டு இன்று வரை அனுசரிக்கப் பட்டு வருகிறது.

1354-ம் ஆண்டில் பத்மைய ஹெக்கடே என்பவர் ஆண்டுவந்த காலத்தில் இவ்வூருக்கு சமீபத்திலிருக்கும் ''கல்லேரி'' என்ற இடத்தில் கல்லேரித்தாயா என்ற பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர் வசித்து வந்தார். ஏதோ சரீர சம்பந்தப்பட்ட தொந்தரவினுல் பிராணஹத்தி

செய்துகொண்டு பூதரூபமாக சுவாமியின் சன்னதிக்கு எதிரில் வசிக்கும்படி ஏற்பட்டது. இதை அறிந்த ஹெக்கடே அவர்கள் அந்த பூதத்திற்கு தேவஸ்தான வெளி பிரகாரத்தில் ஒரு இடத்தில் இருக்கச் சொல்லி அதற்கு வேண்டிய பூஜைகளையும் சரிவர செய்து வந்தார். அது முதல்கொண்டு அன்னப்ப சுவாமியும், கல்லேரித்தாயும் முக்கியமான பூத தெய்வங்களாய் பக்தாதிகளின் பல விதமான குறை, துன்பம் முதலியவைகள் எல்லாம் நிவர்த்தி செய்து கொண்டு வருகின்றனர்.


இச்க்ஷேத்திரத்தில் ஒரு முக்கியமான விசேஷம் என்னவெனில், துஷ்ட கிரஹங்களினால் துன்புறுத்தப் பட்டவர்கள், காற்றுசேஷ்டைகளினால் அவதிபடுபவர்கள், பேய், பிசாசு, பிரும்மராக்ஷஸ முதலியவைகளால் பிடிக்க பட்டவர்கள், பைத்தியம், மூளைகெட்டு தடுமாறுதல், தீராத வியாதிகளினால் அவதிப்படுபவர்கள், புத்திர சந்தான மில்லாமல் துயருடையவர்கள், மற்றபடி குடும்ப கிலேசம், வியாபார சம்பந்தமான நஷ்ட கஷ்டங்கள் உடையவர்கள் எல்லோரும் வந்து புண்ணிய நதியில் ஸ்நானம் செய்து ஸ்ரீ மஞ்சுநாத சுவாமியையும், தர்ம தேவதைகளையும் தரிசித்து, ஹெக்கடே அவர்கள் நிய மித்தபடி நடந்து கொண்டால், அவரவர்கள் யோக்கி தைக்கும், பக்தி சிரத்தைக்கும் தகுந்தபடி பரிகாரம் கிடைத்துக் கொண்டு வருகின்றன.

பத்மைய்ய ஹெக்கடே அவர்களுக்கு சந்ததி இல்லை. தன் சகோதரி குமாரனான சந்திரய்யாவை தத்து எடுத்துக்கொண்டு தனக்குப்பின் அவர் பட்டத்துக்கு வரவேணுமாய் நியமித்தார். 1354-ம் ஆண்டிலேயே மத்மய்ய ஹெக்கடே காலமானார். சுவீகார குமாரனான சந்தய்யா ஹெக்கடே பட்டத்துக்கு வந்தார்.



ಶ್ರೀ ಮಂಜುನಾಥಸ್ವಾಮಿಯ ದೇವಾಲಯ


(Sri Manjunatheshwara Temple)



ಶ್ರೀ ಚಂದ್ರನಾಥಸ್ವಾಮಿಯ ಬಸದಿ
(Sri Chandranatha Swamy Basadi)



ನೆಲ್ಯಾಡಿಬೀಡು
(Nelliyadi Beedu)




ಶ್ರೀ ಮಂಜುನಾಥಸ್ವಾಮಿ

(Sri Manjunatha Swamy)



ಶ್ರೀ ಅಣ್ಣಪ್ಪಸ್ವಾಮಿ, ಧರ್ಮದೇವತೆಗಳೊಡಗೂಡಿ 'ಲಿಂಗ'ವನ್ನು ತರುವುದು

(Sri Annappa Swami Carrying the "Lingam")



ಶ್ರೀ ಅಮ್ಮನವರು

(Sri Ammanavaru)



ಅನ್ನಪೂರ್ಣ ಅನ್ನ ಛತ್ರ
(Annapoorna Dining Hall)




ಪುಣ್ಯ ನದಿ ನೇತ್ರಾವತಿ
(Sacred River Netravathi)



ಪೂಜ್ಯ ಶ್ರೀ ವೀರೇಂದ್ರ ಹೆಗ್ಗಡೆಯವರು
(Rev. Sri D. Veerendra Heggade)



ಪೂಜ್ಯ ದಿ। ಚಂದಯ್ಯ ಹೆಗ್ಗಡೆಯವರು
(Rev. Late Sri D. Chandayya Heggade)




ಪೂಜ್ಯ ದಿ। ಮಂಜಯ್ಯ ಹೆಗ್ಗಡೆಯವರು
(Rev. Late Sri D. Manjayya Heggade)



ಪೂಜ್ಯ ದಿ। ರತ್ನವರ್ಮ ಹೆಗ್ಗಡೆಯವರು
(Rev. Late Sri D. Ratnavarma Heggade)



ಹೊಸೆಯರಿತ ನಡಿಗೆ—ಧರ್ಮದೇವತೆಗಳ ಪ್ರತಿನಿಧಿಗಳೊಂದಿಗೆ
(Sri Heggade Entering the Temple with the Representatives of Dharmadaivas)




ಶ್ರೀ ಸ್ವಾಮಿಯ ಬೆಳ್ಳಿ ರಥ

(Silver Chariot)




ಶ್ರೀ ಧರ್ಮಸ್ಥಳ ಮಂಜುನಾಥೇಶ್ವರ ಉಚಿತ ಸಂಚಾರಿ ಆಸ್ಪತ್ರೆ

(Sri Dharmasthala Manjunatheshwara Mobile Hospital)



ಶ್ರೀ ಬಾಹುಬಲಿ ವಿಗ್ರಹದ ಸಾಗಾಣಿಕೆ

(Transportation of Sri Bahubali Statue)



ಕಾವೇರಿ, ಗಂಗಾ, ನರ್ಮದಾ—ಧರ್ಮಛತ್ರಗಳ ಸಾಲು


(The row of Choultries—Cauveri, Ganga & Narmada)



ಲಲಿತೋದ್ಯಾನ
(Lalitodyana Garden)




ವಸಂತ ಮಹಲು
(Vasantha Mahal)



ಅನ್ನಛತ್ರದಲ್ಲಿ ಊಟಮಾಡುತ್ತಿರುವುದು

(Dining at Annapoorna)




ಸಾಮೂಹಿಕ ವಿವಾಹ—ವಧೂವರರ ಸಾಲು


(Row of Newly Weds—Mass Marriage Ceremony)



ನೇತ್ರಾವತಿ ಅತಿಥಿ ಗೃಹ
(Netravathi Guest House)



ವೈಶಾಲಿ ಅತಿಥಿ ಗೃಹ
(Vaishali Guest House)



ಶ್ರೀ ಧರ್ಮಸ್ಥಳ ಮಂಜುನಾಥೇಶ್ವರ ಕಾಲೇಜು—ಉಜಿರೆ

(Sri Dharmasthala Manjunatheshwara College—Ujire)

இவர் காலத்தில் கோயில் பூஜை முறைகளும் அலு வல்களும் அதிகரிக்கப்பட்டன. இவர் ஸ்ரீ மஞ்சுநாதே ஸ்வர சுவாமியின் பால் அபாரமான பக்தி கொண்டிருந் தார். தனக்கு வந்த ஒரு கொடிய வியாதியை அவர் தீர்த்து வைத்ததால், பக்திப் பரவசராகி சுவாமிக்கு தங்கத் தில் நாகாபரணம் என்ற ஆபரணத்தை செய்து சமர்ப் பித்தார். இது 1402-ம் வருஷம் நடந்தது, இவர் 1425-ம் ஆண்டில் காலமானர்.

இவர் காலமான பிறகு இவருடைய தங்கை மக ஞன தேவராஜ ஹெக்கடே பட்டத்துக்கு வந்தார். இவர் காலத்தில் 1435-ம் ஆண்டில் உடுபி ஸோதை மடத்தைச் சேர்ந்தவரும், மடாதீஸ்வரருமான ஸ்ரீ வாதிராஜ சுவாமி கள் இச்க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்தார்.

ஸ்ரீமான் ஹெக்கடே அவர்கள் சுவாமிகளை மிகவும் மாரியாதையுடன் வரவேற்று, 'பிக்ஷை' செய்து கொண்டு போக வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டார். அதற்கு சுவாமிகள், பூதங்களால் பிரதிஷ்டை செய்யப் பட்ட லிங்கம் இருக்கும் இடத்தில் நான் 'பிக்ஷை' செய்ய மாட்டேன் என்ருர். அது கேட்டு ஸ்ரீமான் ஹெக்கடே அவர்கள் சுவாமிகளே சுத்தம் செய்து பூஜை செய்யும்படி வேண்டிக்கொண்டதின் பேரில் சுவாமிகள் ஒப்புக்கொண்டு ஷ 'லிங்கத்திற்கு' தானே சம்ரோக்ஷணே செய்து, தன் சம்பிரதாயக் முறைப்படி பூஜை செய்து பிறகு 'பிக்ஷை' எடுத்துக்கொண்டார். ஸ்ரீமான் ஹெக்கடே அவர்களின் பக்திக்கும், சிரத்தைக்கும் தார்மீக மனேபாவனைக்கும் மெச்சி, வாயாரப் புகழ்ந்து 'இத்தலத்தை 'தர்மஸ்தலம்' என்று கொண்டாடினர். அன்று முதல் இத்தலம் 'தர்மஸ் தலம்' என்று அழைக்கப்பட்டு வருகிறது.

தேவராஜ ஹெக்கடே அவர்கள் காலமானவுடன் அவருக்குப் பிறகு மஞ்சய்ய ஹெக்கடே என்பவர் பட்டத்துக்கு வந்தார். இவர் 33 வருஷகாலம் மிகவும் விமரிசையாக ஆண்டு சென்றனர். இவருக்குப் பிறகு முறைப்படி முறையே, ஜினப்ப ஹெக்கடே, சந்தைய்ய ஹெக்கடே தேவராஜ ஹெக்கடே, அனந்தய்ய ஹெக்கடே, முதலியவர்கள் பட்டத்துக்கு வந்து ஆண்டு காலஞ்சென்றனர் இவர்களுக்குப் பிறகு ரிஷபய்ய ஹெக்கடே, தம்மண்ண ஹெக்கடே, வரதய்ய ஹெக்கடே முதலியவர்களும் பட்டத்துக்கு வந்து ஆண்டு காலஞ்சென்றனர்.

பிறகு சந்தய்ய ஹெக்கடே என்பவர் பட்டத்துக்கு வந்தார். இவர் 27 வருஷகாலம் ஆண்டார், இவருக்கு சந்ததி இல்லை. மங்களூருக்கு சமீபத்திலிருக்கும் 'கூளூர்' பீடுவைச் சேர்ந்த குமரய்ய ஹெக்கடே என்பவரை தத்து எடுத்துக்கொண்டார். இங்கு இவர் பட்டத்துக்கு வந்ததும் கூளூர்பீடு பட்டத்துக்கு சரியானவர்கள் இருக்கவில்லை. தன் சகோதரியை மூடுபெத்திரி பத்ரய்யஷெட்டி என்பவருக்கு திருமணம் செய்வித்து அன்னாரை கூளூர் பீடு பட்டத்தில் அமர்த்தினர் மேற்பார்வை குமரய்ய ஹெக்கடே அவர்களே நடத்திக்கொண்டு வந்தார். அவர் காலமான பிறகு கூளூர் பீடு தனியாய் விட்டது. சில கோர்ட்டு விவகாரங்களும் நடந்தன. இன்றைக்கும் இச்க்ஷேத்திரத்திற்கு கூளூரில் சில சொத்துக்கள் இருக்கின்றன.

குமரய்ய ஹெக்கடே என்பவர் மிகவும் பராக்கிரம சாலி, மல்யுத்த வீரர், அநேக மல்யுத்த வீரர்கள் இவருடன் இருந்தார்கள். அக்காலத்தில் மைசூரை ஆண்டு வந்த திப்புசுல்தானாலும் பிறகு வந்த ஈஸ்ட் இந்தியா கம்பெனியாராலும் மிகவும் அமோகமாக பாராட்டப் பட்டார்கள். இவர் காலத்தில் அநேக இடங்களில்

சொத்துக்கள் வாங்கப்பட்டன. கர்னுடக மாநிலம் முழுவதும் விஜயம் செய்து கம்பீரமான முறையிலும் சகல புரிவாரங்களுடனும் சஞ்சாரம் செய்து தர்மஸ்தலத்தின் புகழையும், கீர்த்தியையும் பரவச்செய்தார். இவர் பிரக்யாதியை கேள்விப்பட்ட மைசூர் மகாராஜா ஸ்ரீ கிருஷ்ண ராஜ உடையார் இவரை தன் அரண்மனைக்கு வரவழைத்து பல ராஜ மாரியாதைகளை வழங்கினுர். புகழ் பெற்ற தர்மஸ்தல 'தசாவதார ஆட்டம்' என்ற நாடகம் நடிக்கும் கலைஞர்களை சில காலம் அவர் மைசூரிலேயே வைத்துக் கொண்டிருந்தார். அன்று முதல் மைசூர் ராஜ்யத்தில் இத்தசாவதார நாடகம் பிரபலமாயிற்று. குமரய்ய ஹெக்கடே அவர்களின் வேண்டுகோளின்படி 'கப்பலு' என்ற கிராமத்தை மைசூர் அரசர் 'சரவண பெலகோலா' மடத்திற்கு சாஸனம் செய்து கொடுத்தார். குடகு ராஜ்யம் விஜயம் செய்தார். அங்கு ஆண்டு வந்த வீரராஜேந்திரனுல் நன்கு கௌரவிக்கப்பட்டு பல ஆயுதங்கள் பரிசாகவும் அளிக்கப்பட்டன.

வீரராஜேந்திரன் தன் குடும்பத்துடன் தர்மஸ்தலம் விஜயம் செய்து சுவாமியை தரிசித்தார்கள்.

மைசூர் அரசர் ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையாரும் தன் முன்னேர்களைப் போல ஸ்ரீ மஞ்சுநாத சுவாமியின் பரம பக்தரானுர். இவர் தைரியமும் பராக்ரமும் இவர் வசமிருக்கும் வீரர்களின் கூட்டமும் கண்டு மெச்சி ஆங்கிலேயர்கள், ஜமால்பாத் என்ற கோட்டையை பிடிக்கவும் அங்கு நடந்துவரும் கலகங்களை அடக்கவும் இவருடைய உதவியை நாடினர். இந்த சம்பவத்திலிருந்து தர்மஸ்தலத்தின் கீர்த்தி வெகு விரைவில் பரவ ஆரம்பித்து விட்டது முப்பது வருஷகாலம் ஆட்சி செய்து விட்டு 1830-ம் ஆண்டில் இவர் காலமானுர்.

இறப்பதற்கு முன் இவருக்குச் சந்ததி யில்லை ஆகையால் சந்தய்யா, மஞ்சய்யா என்ற இரண்டு சமீப பந்துக்களின் குமாரர்களை தத்து எடுத்துக்கொண்டார், இவர் காலமான உடன் சந்தய்யா என்பவர் பட்டத்துக்கு வந்தார். இவர் காலத்தில் கோயில் உட்புறம் எல்லாம் ஜீர்ணோத்தாரணம் செய்து வைத்தார். 1849-ம் ஆண்டில் இவர் காலமானுர். இவருக்குப் பிறகு மஞ்சைய்ய ஹெக் கடே என்பவர் பட்டத்துக்கு வந்தார்.

இவர் காலத்தில் பிராமணர் சாப்பிடும் சத்திரம், கோயில் வெளி பிராகாரம், ஸ்ரீ சந்திரநாத சுவாமி பஸ்தி ஜமா உக்ராணம் இவைகள் எல்லாம் சரியான வகையில் மராமத்து செய்யப்பட்டன. தேவஸ்தானத்திற்காக அநேக வண்டிகளும், கோயிலுக்காக சில தங்க பிரதிமை களும் செய்யப்பட்டன. பிரும்மகலசாபிஷேகம் என்ற அபிஷேகத்தை சுவாமிக்கு உயர்ந்த முறையில் செய்து வைத்தார். இவர் காலத்தில் மூன்று மஹாநடாவளிகள் நடத்தப்பட்டன. நடாவளி என்பது தர்மதேவதைகளுக் காக நடத்தப்படும் உற்சவம். கோயில் பூஜை கிரமங் களும் அதிகரிக்கப்பட்டன. கோயில் நிர்வாகமும் ஒழுங் கான முறையில் அமைக்கப்பட்டு நடத்தப்பட்டது. 45 வருஷ காலம் கீர்த்தியுடன் ராஜ்யபாரம் செய்து விட்டு 1895-ம் ஆண்டில் காலமானுர்.

தர்மபால ஹெக்கடே என்பவர் பிறகு பட்டத்துக்கு வந்தார். சிறிது காலத்திற்குள் இவர் இறந்து விட்ட படியால் இவருக்கும் சந்ததி இல்லை இவர் தாயார் குடும்ப சம்பிரதாயப்படி தன் பந்துக்களின் குமாரர்களான சந்தய்யா, மஞ்சைய்யா என்ற இரண்டு பிள்ளைகளை சுவீ காரம் எடுத்துக் கொண்டனர். அவர்களின் மூத்தவனுன சந்தய்யா ஹெக்கடே பட்டத்துக்கு நியமிக்கப்பட்டார். மேஜர் ஆகாமலிருந்ததால் இவர் தாய் மாமனுன விட்ட

லாவைச் சேர்ந்த பத்ம ஷெட்டி என்பவரை மைனர் கார்டியனாக நியமித்து அவரும் முண்டாஜ் நந்தியைச் சேர்ந்த பத்மனாப பட் என்பருமாக சேர்ந்து பரிபாலனம் செய்து வந்தார்கள். இச்சமயத்தில், தர்மதேவதைகளுக்கு கோயில்களும், யாத்ரிகர்கள் தங்குவதற்கு ஒரு நீளமான பெரிய சத்திரம் கட்டப்பட்டன இவர் பெரியவராகி 20 வருஷ காலம் பட்டம் வகித்து வந்தார். இவர் காலத்தில் பஸ்தியிலிருக்கும் ஸ்ரீ சந்திரநாத சுவாமி கோயில் மராமத்து செய்யப்பட்டது. பஞ்ச கல்யாணம் என்ற உற்சவத்தை வெகு அழகான முறையில் நடத்தினர். தர்மதேவதைகளுக்காக மஹாநடாவளி ஒன்றும் நடத்தினர். குடி தண்ணீருக்காக குழாய்களும் ஏற்படுத்தினர். ஜமா உக்ராணமும் மராமத்து செய்யப்பட்டது. 1918-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இவர் கால்மானர். இவர் காலமான சமயம் இவருக்கு சில மாதங்களான ஓர் ஆண் குழந்தை இருந்தது. இளைய சுவீகாரமான மஞ்சைய்ய ஹெக்கடே என்பவர் பட்டதுக்கு வந்தார். இவர் ஸ்ரீ மஞ்சுநாத சுவாமியின் பேரில் மிகவும் பக்தி கொண்டிருந்தார். வரும் யாத்ரிகர்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் ஏற்படுத்தினர். இல்வச ஆஸ்பத்திரி, கிராம கௌன்சில் முதலியவைகள் எல்லாம் ஏற்படுத்தினர். அழகான வேலைப்பாடுகளுடன் அமைந்த ஒரு மர ரதமும் தயார் செய்யப்பட்டது.

கோயிலுக்காக தங்கத்தில் விக்ரஹம் ஒன்று தயார் செய்து, சாஸ்த்ரோக்தமாக பிரம்ம கலசாபிஷேகம் நடத்தி மேற்படி பிரதிமை கோயிலில் ஸ்தாபிக்கப்பட்டது. வெள்ளி பல்லக்கு ஒன்றும் சுவாமிக்கு அநேக ஆபரணங்களும் தயார் செய்யப்பட்டன. கோயிலுக்காக அநேக சொத்துக்களும் வாங்கப்பட்டது. தென்னை, வாழை, பாக்கு இவைகளை அதிகமாக நட்டு, தோட்ட விவசாயத்தை பெருக்கி விருத்தி செய்தார். உஜ்ஜிரே என்ற

ஊரில், மாணவர்கள் வித்தியாப்பியாசத்திற்காக 'குருகுலம்' ஒன்று 1940-ம் ஆண்டில் ஸ்தாபிதம் செய்தார். அதற்கு 'சித்தவனம் குருகுலம்' என்று பெயர்.

1932-ம் ஆண்டில் தர்மஸ்தலத்தில் சர்வதர்மஸம்மேளனம் என்ற மகாநாட்டை ஆரம்பித்து பிரதி வருஷமும் கார்த்திகை மாதம் லட்சதீப உற்சவத்தின் சமயம் அதை தவருமல் நடத்திக்கொண்டு வந்தார். பலமதங்களைச் சேர்ந்த வித்வான்கள் அழைக்கப்பட்டு அந்தந்த மத தத்துவங்களைப்பற்றி எல்லாம் உபன்யாசங்கள் செய்யப்பட்டு வந்தன. ஆண்டவன் ஒருவனே ! வழிகள் பல என்பதை அடிக்கடி ஞாபகமூட்டிக் கொண்டு வந்தார். சர்வதர்ம சம்மேளனத்தைப்பற்றி வேறு இடத்தில் விபரமாக எழுதப்பட்டிருக்கிறது.

இவர் சென்னை சட்டசபை அங்கத்தினராக இருந்தார். அநேக மகாநாடுகளுக்குத் தலைமை வகித்தார். கலாபிமானி, தானும் நன்ருக சித்திரங்கள் வரைய வல்லவர். எளிய வாழ்க்கையை கைகொண்டவர். பக்த கோடிகளால் நன்கு மதிக்கப்பட்டவர். ஏராளமான தான தர்மங்களைச் செய்தவர். தர்மஸ்தலத்தின் புகழ் இவர் காலத்தில் மிகவும் பரவிற்று. 1955-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி இவர் காலமாஞர்.

இவருக்கு முன் தர்மஸ்தல ஹெக்கடே அவர்களாக இருந்த காலஞ்சென்ற ஸ்ரீமான் சந்தய்ய ஹெக்கடே அவர்களின் ஏக புத்திரனும், பட்டத்திற்கு வாரிசுமான ஸ்ரீமான் ரத்தினவர்மா ஹெக்கடே அவர்களை பட்டத்திற்கு நியமனம் செய்து விட்டு உயிர் நீத்தார்.

ரத்தினவர்மா ஹெக்கடே நூதன தர்மஸ்தலத்தின் சிற்பி

1955-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ம் தேதி இவருக்கு பட்டாபிஷேக மஹோற்சவம் வெகு சிறப்பாகவும் சம்பிரதாயப்படியும், முன்னோர்கள் கையாண்ட விதிப்படியும் தர்மஸ்தலத்தில் நடந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் அக்காட்சியைக் கண்டு களித்தனர். இவர் காலஞ்சென்ற ஸ்ரீமான் சந்தய்யா ஹெக்கடே அவர்களின் ஏக புதல்வர். பட்டத்திற்கு வந்த சமயம் இவருக்கு வயது 36 இவர் 13 வருஷ காலம் தர்மஸ்தல க்ஷேத்திரத்தையும் அதைச்சேர்ந்த இதர தர்ம ஸ்தாபனங்களையும் பரிபாலனம் செய்தார். இதைப் பொதுவாக 'தர்மஸ்தல சமஸ்தானம்' என்று அழைக்கப்படுகிறது.

'தர்மஸ்தல சமஸ்தானம்' என்பது, நெல்லியாடி பீடு, ஸ்ரீ சந்திரநாத சுவாமி பஸ்தி, ஸ்ரீ மஞ்சுநாத சுவாமி சன்னதி, அம்மன் சன்னதி, (அதனுள் நான்கு இதர பூத தெய்வங்களுமிருக்கின்றன). பதி நடே, ஸ்ரீ ஹெக்கடே அவர்கள், இதர வித்யா தார்மீக ஸ்தாபனங்கள் கொண்டனவையாகும்.

இவர் மிகவும் திறமை படைத்தவர். இவரிடம் ஆற்றல், அறிவு, யுக்தி, தைரியம், ராஜநீதி, ராஜ தந்திரம், தாழ்மை, சக்தி எல்லா உயர்ந்த பண்பும் நிறைந்திருந்தன. இவர் பட்டத்திற்கு வந்தபோது இச்க்ஷேத்திரம் ஏற்கனவே புகழ்பெற்றிருந்த போதிலும் அநேக சௌகரியங்கள் இங்கு வரும் யாத்ரிகர்களுக்கு இல்லாமலும், கட்டிடங்களெல்லாம் மிகவும் பழையனதாயும், பார்ப்பதற்கு நன்ருயில்லாததாயும், தற்காலத்திற்கு ஏற்றபடியில்லாததையும் கண்டு - இவைகளையெல்லாம் முறையே திட்டமிட்டு படிப்படியாக அநேக காரியங்களை மேற்கொண்டு இப்புராதன க்ஷேத்திரத்தை உயர்ந்த

முறையில் மராமத்து செய்து அழகும், கம்பீரமும், வந்தவர்கள் மனதை கவர்ச்சி செய்யும் வகையில் இதை புனர் நிர்மாணம் செய்ய வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டார்.

அதன்படி காரியங்களையும் முறையே, ஒவ்வொன்ருக ஆரம்பம் செய்து பூர்த்தி செய்துவைத்தார். அவர் 10 வருஷங்களில் செய்த காரியங்கள் சாதாரணமாய் மற்றவர்களாயிருந்தால் சுமார் 25 வருஷங்களாவது ஆகும்.

விடாமுயற்சி, இராப்பகலாக வேலை ஆகவேண்டும் என்ற சிந்தனை, சொந்த மேற்பார்வை, வேண்டிய சிப்பந்திகளையும் வைத்துக்கொண்டு – சாதனை செய்த மகா புருஷர். அவர் காலத்தில் செய்த ஸ்தல அபிவிருத்தி வேலைகள் சுருக்கமாக கீழே தரப்பட்டிருக்கிறது.

கோயிலுக்கு எதிரிலிருக்கு 'வசந்த மஹால்' என்னும் கட்டிடத்தின் வேலையைப் பூர்த்தி செய்தார்.

அதேபோல் சுவாமிக்கு வெள்ளி ரதம் வேலையும் பூர்த்தி செய்தார்.

மேற்கண்ட இவை இரண்டும் இவருக்கு முன் பட்டத்திலிருந்த ஸ்ரீ மஞ்சைய்ய ஹெக்கடே அவர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியாகாமலிருந்தவைகள்.

கோயிலுக்கு எதிரிலிருக்கும் குளத்தை சுத்தம் செய்து சுற்றிலும் சுவர் எழுப்பி நன்ருக பாதுகாத்தார.

பூந்தோட்டத்திற்கும் காம்பௌண்டு சுவர்கள் எழுப்பி நன்ருக அழகு படுத்தினர்.

சாப்பிடும் சத்திரம் அதாவது போஜன சாலையை நல்ல முறையில் கட்டி மாடியில் அறைகளும் கட்டினர்.

அதிதி விடுதி சாலையையும் ஒழுங்குபட செய்தார்.

தான் குடியிருக்கும் 'பீடு' என்ற இல்லத்தை உயர்ந்த முறையில் அழகாகக் கட்டினார்.

கோயில் வெளி கம்பங்கள், உள்ளிருக்கும் கர்ப கிரகங்களின் வாயிற்படி கதவுகள் இவைகளுக்கெல்லாம் வெள்ளி தகடினால் கட்டி அலங்கரித்தார்.

கோயில் உள்பிரகாரம், வெளிப்பிரகாரம் இவைகளையும் சரியான முறையில் மராமத்து செய்தார்.

கோயிலின் சுற்றிலுமுள்ள மண்ரோடுகளுக்கு தார் போட்டு சரி செய்தார் - தவிர கீழ்கண்டவைகளும் அவர் காலத்தில் செய்யப்பட்டவை.

அன்னப்பன் மலையிலிருக்கும் தர்ம தேவதைகளின் கோயில்கள் சரிசெய்து, மலைக்குப்போக படிகட்டுகள்.

ஸ்ரீ சந்திரநாத சுவாமி பஸ்தி மராமத்து, புதிய கட்டிடங்கள்.

நெல்லியாடி பீடு ரிபேர்-மராமத்து வேலைகள்.

கென்சு மார்கட்டை, கௌரி மார்கட்டை என்ற வசந்த மண்டபங்கள் புதிதாக அழகாக கட்டப்பட்டது.

புதிய இரண்டு மாளிகை அதிதிபவனங்கள் மூன்று பிளாக்குகள் A, B, C, அதில் சுமார் 210 (108 S. R. 102 D. R.) ரூம்கள் உள்ளன.

பிரத்தியேகமான 'காட்டேஜுகள்' யாத்ரீகர்கள் தங்குவதற்காக.

உயர்ந்த பதவியிலிருப்பவர்கள் தங்குவதற்காக அழகான மாளிகை.

பம்பாயிலிருக்கும் 'கேட் வே ஆப் இந்தியா' போல 'தர்மஸ்தல மஹாத்வாரம்'

உயர்ந்த ஞானிகள், சந்நியாசிகள் தங்குவதற்காக 'சந்நியாசி சத்திரம்'.

ஏக காலத்தில் பல சுற்றுலா பஸ்ஸுகள் வந்து விட்டால் அதில் வரும் சுற்றுலா யாத்ரீகர்கள் தங்குவதற்காக பெரிய ஹால்கள் 12. அவைகள் 'D' பிளாக்கில் இருக்கின்றன.

வித்தியா ஸ்தாபனங்கள், குறிப்பாக ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரா கல்லூரி, ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரா உயர்நிலை பள்ளிக்கூடம் முதலியவை.

கோயிலுக்கு மின்சார வசதி, நேத்ராவதி ஆற்றிலிருந்து பைப்புகள் மூலம் குடி தண்ணீர் வசதி நேத்ராவதி நதி மேல் பாலம் முதலியவைகள்.

மேலே விவரித்த இவ்வளவு பெரிய காரியங்கள் தவிர க்ஷேத்திர அபிவிருத்தி சம்பந்தமாக அநேக இதர மராமத்துகளையும் செய்தார்.

சுமார் 39 அடி உயரமுள்ள ஒரே சிலையில் ஸ்ரீ கோமடேஸ்வர சுவாமி மூர்த்தி ஒன்று செதுக்கி அதை கோயிலில் ஒரு மலையின் மீது பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்று ஷெ கைங்கர்யத்தை இதே ஜில்லாவிலிருக்கும் 'கார்காளா' என்ற ஊரில் செதுக்கல் வேலையை ஆரம்பித்தார். அவ்வேலை இன்னும் நடந்து கொண்டிருக்கிறது.

இவர் காலத்தில் தர்மஸ்தலத்திற்கு ராஜ்யபாலர்கள் (கவர்னர்கள்), மஹாராஜாக்கள், பீடாதிபதிகள், பிரபல சன்னியாசிகள், மந்திரிகள், வித்வான்கள், பாடகர்கள், கவிகள் முதலிய அநேக பிரபல புருஷர்கள் விஜயம் செய்து, அவர்களுக்கு இவர் நடத்திய அதிதி சத்காரத்தையும், உபசாரத்தையும் கண்டு வாயார புகழ்ந்து இவரைக் கொண்டாடி இருக்கிருர்கள். 1966-ம் ஆண்டு உடுபி அஷ்ட மடத்தைச் சேர்ந்த காணியூர் மடத்து சுவாமிகளின் 'பரியாய' மஹோற்சவ வைபவ சமயம், அங்கு சேர்ந்த மாபெரும் சபையில் ஸ்ரீ காணியூர் மடத்து சுவாமிகள் இவருக்கு 'தர்ம வீரர்' என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.

அநேக சிறந்த ஸ்தாபனங்களுக்கும், வித்யா பீடங்களுக்கும் தாராளமாக நன்கொடைகள் வழங்கி இருக்கின்ருர்.

இதுவரை தர்மஸ்தலத்தில் பரிபாலனம் செய்த 'ஹெக்கடே' அவர்களில் ஸ்ரீ ரத்தினவர்மா ஹெக்கடே அவர்கள் ஒரு சிறந்த 'ரத்தினம்' போன்றே பெயரெடுத்து கீர்த்தியுடன் மறைந்தார். தர்மஸ்தலத்தில் இன்று நம் கண்ணெதிரில் காணப்படும் பிரதி ஒன்றும் அவராலேயே கட்டப்பட்டு, மராமத்து செய்யப்பட்டு, அழகும், சுந்தரமும், கம்பீரமும் விளங்கும்படி செய்யப்பட்டதால் அம்மகா புருஷரை ''நூதன தர்மஸ்தலத்தின் சிற்பி'' என்றே அழைக்க வேண்டும்.

இப்படிப்பட்ட அற்புதமான சேவைகளைச் செய்து பெயரும் புகழும் பெற்ற இவர் சில மாதங்களாய் நோய் வாய்ப்பட்டிருந்து 1968-ம் வருஷம் அக்டோபர் மாதம் 12-ம் தேதி காலமானுர்.

தற்சமயம் பீடாதிகாரிகளாயிருக்கும்
ஸ்ரீ வீரேந்திர ஹெக்கடே

இவர் காலஞ்சென்ற ஸ்ரீ ரத்தினவர்மா ஹெக்கடே அவர்களின் ஜேஷ்ட புத்திரர். தந்தைக்குப் பிறகு ஜேஷ்ட புத்திரனே பட்டத்திற்கு வரவேண்டுமென்பது வழக்க மாகையால் தந்தை காலமான பிறகு இவர் முறைப் படி பட்டத்திலமர்ந்து, பீடாதிகாரிகளானுர். இவ்வைப வத்தை 'பட்டாபிஷேகம்' என்று அழைக்கப்படுகிறது. இது 24-10-1968-ல் ஸ்ரீ தர்மஸ்தலத்தில் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர்.

இவர் 25-11-1948-ம் ஆண்டில் ஜனித்தவர். சில வருஷங்கள் தர்மஸ்தல பள்ளியிலும், பிறகு பெங்களூரி லும் படித்தவர் பி. ஏ. வரை கல்வி பயின்றவர். இவரது கல்வி முன்னேற்றத்தில் இவர் தந்தை மிகவும் அக்கரை காட்டி வந்ததும் இல்லாமல், இப்புத்தகம் எழுதிய ஸ்ரீ சுவாமிகளேயும் அவரை நல்ல முறையில் பழகிக்கொண்டு வரும்படியும் கேட்டுக்கொண்டார். அதன்படியே நல்ல முறையில் அவர் கல்வி பயிற்சி நடந்து கொண்டு வந்தது. எதிர்பாராதபடி தந்தையார் சிறு வயதிலேயே காலமாய் விட்டபடியால், படிப்பை விட்டு விட்டு பீடாதிகாரியின் பொறுப்பை மேற்கொள்ளும்படி ஏற்பட்டது. வயது சிறியதாகிலும், உயர்ந்த பண்பும், தெய்வபக்தி, தூய உள்ளம், சாந்த சுபாவம், பெரியோர்களிடம் மரியாதை, அடக்கம் இனிமையான பேச்சு முதலிய நல்ல குணங்களே படைத்தவர்.

பட்டத்திற்கு பீடாதிகாரிகளான உடனே தன் தந்தையார் பூர்த்தி செய்யாமல் விட்டுபோன காரியங்களே பூர்த்தி செய்யவும், மேற்கொண்டு இந்த க்ஷேத்திரத்தை

அபிவிருத்தி செய்துவரும் யாத்திரீகர்களுக்கு வேண்டிய வசதிகளை உயர்ந்த முறையில் செய்து இச்க்ஷேத்திரத்தின் கீர்த்தியை பரப்ப வேண்டுமென்றும் சங்கல்பம் செய்து கொண்டு, 'காரியங்களை ஆரம்பித்தார். அவர் பீடாதிகாரிகளாகி 24-10-1974-ல் 6 வருஷங்களாகின்றன. இந்த 6 வருஷ காலத்தில் அவர் அநேக நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார். அவைகளை சுருக்கமாக கீழே விவரிக்கப்பட்டிருக்கிறன :—

ஸ்ரீ தர்மஸ்தலம் ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரா உயர்தரப் பள்ளி கட்டிடம் பூர்த்தி செய்து 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் அது திறந்து வைக்கப்பட்டது.

உஜ்ஜிரேயிலிருக்கும் ஸ்ரீ தர்மஸ்தல மஞ்சுநாதேஸ்வரா கல்லூரி உபாத்தியாயர்களுக்காக வீடுகள் கட்டி 1970-ம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டன.

ஸ்ரீ தர்மஸ்தலத்திற்கு சமீபத்தில் பண்ட்வால் என்ற ஊரிலிருக்கும் ஜெயின பஸ்தியை புனருத்தாரணம் செய்து, ஸ்ரீ ஆதீஸ்வர சுவாமியை சாத்ரோக்தமாக பிரதிஷ்டை செய்து, 10 தினங்கள் இது சம்பந்தமான வைபங்கள் 1969-ம் ஆண்டு, மே மாதம் நடைபெற்றன. இச்சமயம் ஸ்ரீ ஹெக்கடே அவர்கள் தர்மமாக 3000 சேலைகள் ஸ்திரிகளுக்கு வழங்கினார்.

படிக்காமலும், வேலையில்லாமலும், காலத்தை வீணாக்கிக் கொண்டு திரிந்து வந்து கொண்டிருப்பவர்களுக்காக, தர்மஸ்தலத்தில் அநேக வேலைகளை ஆரம்பித்து, அவர்களுக்கு வேலை கொடுத்து, அவர்களை சுறுசுறுப்பாக்கி, அவர்கள் ஜீவனத்திற்கும் வழி செய்து கொடுக்கப்பட்டது.

1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஸ்ரீ ஹெக்கடே அவர்கள் வெளிநாடுகளான இத்தாலி, பிரான்சு, அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிட்ஜர்லாந்து முதலிய இடங்களுக்கு பிரயாணம் செய்து அதன் மூலம் அனுபவமடைந்தார்.

26-10-1969-ல் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் மாஜி மஹாராஜரான ஸ்ரீ ராமவர்மா அவர்களும், அவர் தர்மஸ்தலத்திற்கு விஜயம் செய்து ஸ்ரீ மஞ்சுநாசுவாமியை தரிசித்தார்கள்.

ஸ்ரீ தர்மஸ்தலத்திற்கு சமீபத்திலிருக்கும் உஜ்ஜிரே என்ற ஊரில் ஸ்ரீ தர்மஸ்தல மஞ்சுநாதேஸ்வரா கல்லூரி கட்டி அதை 13-3-1971-ல் ஸ்ரீ சித்தகங்கா மடம் ஸ்ரீ சிவகுமார சுவாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஷி காலேஜில் படிக்கும் பெண்களுக்காக தங்கும் விடுதி கட்டி அது 15-7-1970-ல் சுத்தூர் மடம் ஸ்ரீ சிவ ராத்திரி ராஜேந்திர சுவாமிகளால் திறக்கப்பட்டது.

நல்ல வேலைப்பாட்டுடன் கொண்ட, மரத்தினுல் ரதம் ஒன்று தயார் செய்து அதை 1969-ம் ஆண்டில் ஸ்ரீ மஞ்சுநாத சுவாமிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு 'பிரம்ம ரதம்' என்று பெயர்.

தட்சிண கன்னட ஜில்லாவின் சரித்திரத்திலேயே முதல் முறையாக பாரதத்தின் ஜனுதிபதி ஸ்ரீ வி. வி. கிரி அவர்கள் தனது மனைவியாருடன் 11-5-1970-ல் ஸ்ரீ தர்மஸ்தலத்திற்கு விஜயம் செய்து, ஸ்ரீ சுவாமியை தரிசித்து, அன்று மாலை 'ஸ்ரீ பாஹுபலி விஹார்' என்ற மலை மேலிருக்கும் இடத்திற்கு அடிக்கல் நாட்டினுர். அவருக்கு அமோகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. இவ்விடம் நடைபெறும் காரியங்களை கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

1969-ம் ஆண்டில் உடுபி க்ஷேத்திரத்தில் நடை பெற்ற கர்நாடக ராஜ்ய விஸ்வ இந்து பாரிஷத் மகா நாட்டிற்கு ஸ்ரீ ஹெக்கடே அவர்கள் வரவேற்பு கமிட்டி தலைவராகயிருந்து உயர்ந்த முறையில் அதை நடத்தி வைத்தார்கள்.

16-10-1970-ல் மைசூர் கவர்னராயிருந்த ஸ்ரீ தர்மவீரா அவர்கள் தன் தாயுடன் இச்க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்து ஸ்ரீ சுவாமியை தரிசனம் செய்தார்கள்.

சிக்கமகளூருக்கு சமீபத்திலிருக்கும் 'சம்செ' என்ற ஊரிலிருக்கும் ஜெயினபஸ்தியை புனருத்தாரணம் செய்து 'பஞ்சகல்யாண' மஹோற்சவம் மிகவும் விமரிசையாக செய்யப்பட்டது.

மஹா சிவராத்திரி தினம் மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை 'சிவபஞ்சாக்ஷரி' பஜனை நடத்த 1972-ம் ஆண்டு முதல் ஏற்பாடு செய்யப்பட்டது.

கண் சிகிச்சைச்காக முகாம் ஒன்று ஏற்பாடு செய்து பிரபல கண் வைத்தியர் Dr. M. C. மோடி அவர்களால் நூற்றுக்கணக்கான மக்களுக்கு, அறுவை, மற்ற சிகிச்சை கள் இலவசமாக அளிக்கப்பட்டது. ஸ்ரீ மோடி அவர் களின் உயர்ந்த தொண்டை பாராட்டி ஸ்ரீ ஹெக்கடே அவர்கள் அன்னாருக்கு 'நேத்திர சிகிச்சாசார்யா' என்ற பட்டத்தைக் கொண்டு கௌரவித்ததுமல்லாமல் அவருக்கு ரூ. 40,000 விலையுள்ள ஒரு மோட்டார் வானையும் பரிசாக அளித்து கௌரவித்தார்.

யாத்ரீகர்கள் சௌகரியமாக தங்குவதற்காக நவீன முறையில் 26 அறைகள் கொண்ட 'நேத்ராவதி' என்ற

பவனத்தை கட்டி 11-11-1971-ல் அது சுவாமி பரமஹம்ச சேஷாச்சார்யரால் திறந்து வைக்கப்பட்டது.

4-12-1971-ல் காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சர்கராசார்ய சுவாமிகள் தன் பரிவாரங்களுடன் இந்த க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்து, சுவாமியை தரிசனம் செய்து 3 தினங்கள் தங்கியிருந்து இங்கு நடைபெறும் தானதர்மங்களைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

இரண்டாம் முறையாக பாரதத்தின் ஜனுபதி ஸ்ரீ வி. வி. கிரி அவர்கள் தனது மனைவியாருடன் தங்கள் '55-வது வருஷ கல்யாண தினத்தை' கொண்டாடுவதற்காக 27-12-1971-ல் இச்க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்து ஸ்ரீ சுவாமியை தரிசனம் செய்து ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கினுர்கள்.

இத்தமிழ் புத்தகத்தை எழுதிய ஸ்ரீ சுவாமி பரம ஹம்ச-சேஷாச்சார்யா அவர்களின் 80-வது வயது பூர்த்தியை மிகவும் விமரிசையாகவும் இதுவரை யாருக்கும் நடந்திராத உயர்ந்த முறையிலும் 2-8-1971-ல் ஸ்ரீ தர்ம ஸ்தலத்தில் கொண்டாடி, ஸ்ரீ சுவாமிகள் க்ஷேத்திரதிற்கு 20 ஆண்டுகளாக செய்துவரும் பெரும் சேவைகளை பாராட்டி அவருக்கு அச்சமயம் 'ஸ்ரீ தர்மஸ்தல க்ஷேத்திர சேவா பூஷணம்' என்ற பட்டத்தை ஹெக்கடே அவர்கள் அவருக்கு வழங்கி கௌரவித்தார்கள் ஸ்ரீ சுவாமிகளே தன் ஜீவன சரித்திரத்தைப்பற்றி எழுதிய புத்தகத்தையும் ஹெக்கடே அவர்கள் வெளியிட்டார்கள்.

18-1-1972-ல் உடுபி க்ஷேத்திரத்தில் நடைபெற்ற 'பரியாய மஹோற்சவ' சமயத்தில், பரியா சுவாமிகளான திரு அதமார் மடத்து சுவாமிகள், ஹெக்கடே அவர்கள்

செய்து வரும் அனேக தர்ம காரியங்களைப் பாராட்டி அவருக்கு 'தர்ம பூஷணம்' என்ற பட்டத்தை அளித்து கௌரவித்தார்கள்.

இச்சையிருக்கும் தகுதிவாய்ந்த சிறுவர்களுக்கு நாட்டியம், ஆட்டம், சங்கீதம், தாள-மத்தளம், முதலியவைகள் சொல்லிக் கொடுப்பதற்காக ஸ்ரீ தர்மஸ்தலத்தில் 'லலிதகலாகேந்திரம்' என்ற சாலையை 14-7-1972-ல் ஆரம்பித்து வைக்கப்பட்டு, நல்ல கலாவிதர்களைக் கொண்டு அது நடத்தப்பட்டு வருகிறது.

15-9-1972-ல் பாரதத்தின் மத்திய அமைச்சாரான திரு T. A. பாய் அவர்கள் தனது மனைவியுடன் இச்க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்து சுவாமியை தரிசனம் செய்தார்கள்.

தேவஸ்தானத்தில் வேலை செய்பவர்களுக்காக 18 சிறிய விடுதிகள் கட்டி 'மஞ்சு ஸ்ரீ நகர்' என்று பெயரிட்டு 23-10-1972-ல் கர்நாடகத்தின் கல்வி அமைச்சர் திரு மல்லிகார்ஜுனசுவாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

பிரபல தர்மஸ்தல ''யக்ஷகான ஆட்டத்தை'' வட இந்தியாவில் ஆடி காண்பிப்பதற்காக பம்பாய், டெல்லி முதலிய இடங்களில் இது நடத்தப்பட்டது.

தேவஸ்தானத்தின் பக்கத்திலிருக்கும் போஜன சாலை பழைய சத்திரத்தை நன்றாகவும் பெரியதாகவும் கட்டப்பட்டது.

ஸ்ரீ வீரேந்திர ஹெக்கடே அவர்களின் திருமணம் ஸ்ரீ தர்மஸ்தல க்ஷேத்திரத்தில் 27-12-1972-ல் வெகு

சிறப்பாக நடைபெற்றது. தன் சொந்த மாமன் மகளாகிய செள ஹேமாவதியம்மா அவர்களே மணந்து கொண்டார்.

இக் கல்யாண வைபத்திற்கு ஆயிரக்கணக்கான க்ஷேத்திர பக்தர்களும், பந்துமித்திரர்களும், அநேக பீடாதிகாரிகளின் பிரதிநிதிகளும், இதர கண்ணிய வியக்திகளும், வந்திருந்தார்கள். இது மிகவும் மகிழ்ச்சியைத் தரக்கூடிய வைபவமாக இருந்தது.

கர்னுடக கவர்னரான திரு. மோஹன்லால் சுகாடியா தன் குடும்பத்தாருடன் இந்த க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்து ஸ்ரீ சுவாமியை தரிசனம் செய்தார்.

தட்சிண கன்னட ஜில்லாவிலிருக்கும் கார்கால என்ற ஊரில் தயார் செய்யப்பட்ட 39 அடி உயரமுள்ள ஸ்ரீ பாஹுபலி சுவாமியின் சிலா மூர்த்தியை 19-3-1973ல் வெகு சிறப்பாக ஸ்ரீ தர்மஸ்தலத்திற்கு கொண்டுவரப்பட்டது. இது ஒரே கல்லில் செதுக்கப்பட்டது. இதன் பாரம் 210 டன். கர்னுடக ராஜ்யத்தைச் சேர்ந்த ஹாசன் ஜில்லாவிலுள்ள ''சரவணபெலகோளா'' என்ற ஊரிலிருக்கும் ஸ்ரீ பாஹுபலி சுவாமி மூர்த்தியின் உயரத்திற்கு அடுத்தபடியானது. இது காலஞ்சென்ற ஸ்ரீ ரத்தினவர்மா ஹெக்கடே அவர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பிரபல சிற்பி. கார்காலா, ரஞ்சால், திரு கோபால் ஷினய் அவர்களின் மேற்பார்வையில் இம்மூர்த்தி செதுக்கப்பட்டது. பம்பாய் திரு மங்கத்ராம் பிரதர்ஸ் அவர்கள் கம்பெனியால் இதை இங்கு கொண்டு வரப்பட்டது. 23-3-1973ல் இம் மூர்த்தியை ''பாஹுபலிவிஹார்'' என்ற மலேக்கு கொண்டு செல்லப்பட்டது. ஷ ஸ்ரீ பாஹுபலி சுவாமி மூர்த்தி வேனூர் என்ற ஊருக்கு வந்து சேர்ந்தபோது அங்கே அநேக வடு

டங்களுக்கு முன் பிரதிஷ்டையாயிருக்கும். ஸ்ரீகோமடீஸ்வர சுவாமிக்கு 13-3-1975ல் வெகு விமரிசையாக ''மஹாமஸ்தகாபிஷேகம்'' நடைபெற்றது.

கர்னாடக ராஜ்யத்தின் வட பகுதிகளில் மழையில்லாமல் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சமயம் ''வருண பகவானை'' மழைக்காக பிரார்த்திக்க சாஸ்த்ரோக்தமாக 3 தினங்கள் 1973ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ''பர்ஜன்ய ஜப யக்ஞம்'' நடைபெற்றது.

கர்னாடக ராஜ்யத்தின் வட பகுதிகளில் பஞ்சம் அதிகமாக பீடித்திருந்த சமயம் திரு. ஹெக்கடே அவர்கள் 5000 சேலைகளும், 2000 ஜோடி வேட்டிகளும் இலவசமாக அம்மக்களுக்கு கொடுத்ததுடன் 5 இடங்களில் அன்னதான சத்திரங்களையும், ஏற்பாடு செய்து ஏழை மக்களுக்கு அன்னமளித்தார். பசுமாடுகளுக்கும் வைக்கோல் உதவி செய்தார். தவிர அவைகள் எல்லாம் சரியாக விநியோகிக்கப்படுகிறதா என்று தானே நேரில் போய் பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறினர். பஞ்சத்தினல் பீடிக்கப்பட்டவர்களுக்கு இது மிகுந்த ஆறுதலை அளித்தது.

ஏழைகளின் கஷ்டத்தை கூடுமானவரை குறைப்பதற்காக திரு ஹெக்கடே அவர்கள் தர்ம கல்யாணங்கள் செய்வித்தார் எல்லா மதத்தவர்களும் இதை உபயோகப் படுத்திக் கொண்டார்கள். 1972ம் ஆண்டில் 80 கல்யாணங்களும், 1973ம் ஆண்டில் 230 கல்யாணங்களும், 1974ம் ஆண்டில் 290 கல்யாணங்களும் வெகு சிறப்பாக ஸ்ரீ தர்மஸ்தலத்தில் நடைபெற்றன. அந்தந்த மதத்தின் சம்பிரதாயப்படி நடத்தப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் இத்திருமணங்களை கண்டுகளித்தனர்.

ஸ்ரீ தர்மஸ்தலத்தில் உயர்தர ஆரம்பப்பள்ளி ஒரு புது கட்டிடம் கட்டி 6-10-1973ல் மாணவர்களுக்காக திறக்கப்பட்டது.

ஸ்ரீ தர்மஸ்தலத்தில் வரும் யாத்திரிகர்கள் தங்குவதற்காக அநேக சத்திரங்களிருந்தும் அவைகள் போதாமையால், மற்றுமொரு புதிய சத்திரம் கட்ட தீர்மானித்து அதன் அஸ்திவாரக் கல்லை 6-10-1973ல் கர்னடக ராஜ்ய ரெவின்யூ அமைச்சர் திரு. ஹுச்சமத்ஸி கௌடா அவர்களால் நாட்டப்பட்டது. இதற்கு ''வைசாலி'' என்று பெயரிடப்பட்டிருக்கிறது இதில் 120 ரூம்களிருக்கிறது.

உஜ்ஜிரேயிலிருக்கும் ஸ்ரீ தர்மஸ்தல மஞ்சுநாதேஸ்வரா காலேஜில் மேல் கொண்டு ரூம்கள் கட்டப்பட்டன மாணவர்கள் எண்ணிக்கை அதிகமானபடியால்.

ஸ்ரீ தர்மஸ்தலத்திற்கு சமீபத்திலிருக்கும் உஜ்ஜிரே என்ற ஊருக்கு அருகில் ''சித்தவனம்'' என்ற குருகுலம் இருக்கிறது. ஏழை வித்தியார்த்திகளின் உயர்ந்த படிப்புக்காகவும், யோக்கியதையுடைய மாணவர்களுக்காகவும் 1940-ம் ஆண்டில் காலஞ்சென்ற திரு. மஞ்சைய்ய ஹெக்கடே அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. சமஸ்கிருதமும் இங்கே சொல்லிக் கொடுக்கப்படுகிறது. காலஞ்சென்ற திரு. ரத்தினவர்மா ஹெக்கடே அவர்கள் காலத்தில் இதில் வசிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை 100 ஆக இருந்தது. திரு. வீரேந்திர ஹெக்கடே அவர்கள் அநேக ரீதியில் இந்த குருகுலத்தை அபிவிருத்தி செய்திருக்கிறார். மாணவர்கள் எண்ணிக்கை 300 ஆக ஆனதுமல்லாமல் அவர்கள் தங்குவதற்காக 22 ரூம்கள் கொண்ட ஒரு பிளாக்கையும் கட்டியிருக்கிறார். இதெல்லாம் இலவசமாகவும், சமஸ்கிருதம் படிப்பவர்களுக்கு விசேஷ சலுகைகளும் அளிக்கப்படுகின்றன. பழைய

காலத்திலிருந்த ''குருகுல வாசத்தைப்'' போலிருக்கிறது. ஒழுக்கம், சீலம், பக்தி, சிரத்தை, சேவை முதலியவைகள் சரியான முறையில் நடத்தப்படுகின்றன. 5, 6, உபாத்தியாயர்களும் மாணவர்களுடன் வசிக்கிறார்கள். சமபந்தி போஜனம் சாமூகிக பிரார்த்தனை முதலியன நடக்கின்றன. இதில் படிக்கும் மாணவர்கள் பரீட்சையில் ''நல்ல மதிப்பு ஸ்தானம்'' பெற்று வித்தியார்களாயிருப்பது பாராட்டத்தக்கது.

கோகர்ணத்திலிருக்கும் அரசாங்க மருத்துவமனைக்கு திரு. ஹெக்கடே அவர்கள் சுமார் ரூ. 12,000 மதிப்புள்ள ஆபரேஷன் மேஜையும், விளக்குகளும் இலவசமாக கொடுத்திருக்கிறார்.

நம் தேசத்துள்ள தேவாலயங்கள் என்ன முறையில் நடக்கின்றன என்பதை நேரில் கண்டறிய திரு. ஹெக்கடே அவர்கள் 1969ம் ஆண்டில் தமிழ் நாட்டிலுள்ள தேவாலயங்களையும், 1970ம் ஆண்டில் ஆந்திர பிரதேசத்திலுள்ள தேவாலயங்களையும், 1971ம் ஆண்டில் கேரளத்திலுள்ள தேவாலயங்களையும், 1973ம் ஆண்டில் ஒரிஸாவிலுள்ள சில தேவாலயங்களையும் பார்த்து விசேஷ பயனடைந்தனர்.

ஸ்ரீ தர்மஸ்தல தேவஸ்தானத்தால் கீழ் கண்ட 16 கல்வி நிலையங்கள் நடத்தப்படுகின்றன :—

1. கல்லூரிகள்

ஸ்ரீ தர்மஸ்தல மஞ்சுநாதேஸ்வர கல்லூரி, உஜ்ஜிரே.

ஸ்ரீ தர்மஸ்தல மஞ்சுநாதேஸ்வரா கலை, அறிவியல் அண்டு வாணிகயியல் கல்லூரி, ஹொனுவர்.

J. S. S. பனசங்கரி, கலைக் கல்லூரி, தார்வார்.

J. S. S. சாந்தி குமார், குப்பி, அறிவியல் கல்லூரி, தார்வார்.

J. S. S கப்பூர் இன்ஸ்டிடுய்ட் ஆப் இன்ஜினியரிங், தார்வார்.

J. S. S. சங்கரி, சட்ட கல்லூரி, ஹுப்ளி

2. உயர்நிலைப்பள்ளி

ஸ்ரீ தர்மஸ்தல மஞ்சுநாதேஸ்வரா உயர்நிலைப் பள்ளி, உஜ்ஜிரே.

ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வர உயர்நிலைப்பள்ளி தர்மஸ் தலம்.

எம். கே. டி. லக்ஷ்மண ராவ், கிர்லாங்கர் உயர் நிலைப்பள்ளி, ஹரிஹார்.

3. ஆரம்பப்பள்ளி

ஸ்ரீ தர்மஸ்தல மஞ்சுநாதேஸ்வரா உயர்தர ஆரம் பப்பள்ளி, உஜ்ஜிரே.

ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரா, உயர்தர ஆரம்பப்பள்ளி தர்மஸ்தலம்.

ஸ்ரீ தர்மஸ்தல மஞ்சுநாதேஸ்வரா உயர்தர ஆரம் பப்பள்ளி, மையாடி.

4. இதர ஸ்தாபனங்கள்

J. S. S இன்ஸ்டிடுயூட் ஆப் எக்னமிக்ஸ் ரிசர்ச், தார்வார்.

J S. S. பஞ்சாயத் ராஜ் டிரெயினிங் சென்டர், தார்வார்.

J. S. S வொகேஷனல் ஸ்கூல் ஆப் ஆர்ட் & கிராப்ட், தார்வார்.

ஸ்ரீ தர்மஸ்தல மஞ்சுநாதேஸ்வரா சட்ட கல்லூரி, மங்களூர்.

1968-ம் ஆண்டு முதல் 1973-ம் ஆண்டு வரை ஸ்ரீ ஹெக்கடே அவர்கள் ஸ்ரீ தர்மஸ்தலத்தில் 6 சர்வமதர்ம, சாஹித்திய சம்மேளனங்களை மிகவும் விமரிசையாக நடத்தினர். அநேக வித்வான்களும், கவிகளும், சங்கீத வித்வான்களும், கர்நாடக ராஜ்யத்தின் அநேக கண்ணிய வியக்திகளும் இதில் கலந்துகொண்டார்கள்.

கிராமாந்திர பகுதிகளில் வாசம் செய்யும் ஏழை, எளியோர்க்கு வைத்திய சிகிச்சை உதவி செய்வதற்காக $1\frac{1}{4}$ லக்ஷ ரூபாய் சிலவில் ஒரு ''மொபைல் வான்'' வாங்கி அதிலே எல்லா ஏற்பாடுகளும் செய்து, டாக்டர்களும் நர்ஸ்களும் அந்த வானுடன் கிராமம் கிராமமாகச் தேவையான மருந்தை இலவசமாக கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது அது 15-4-1974ல் கர்னுடக ராஜ்ய ஆரோக்கிய மந்திரிகளான. ஸ்ரீ எச். சித்தவீரப்பா அவர்களால் ஸ்ரீ தர்மஸ்தலத்தில் திறந்துவைக்கப்பட்டது அந்த மருத்துவ மனைக்கு பெயர் ''தர்மஸ்தல மஞ்சுநாதேஸ்வரா மொபைல் ஆஸ்பத்திரி'' மூன்று கிராமங்களில் மூன்று மாத காலம் மூன்று தினங்களுக்கு கொரு முறை சென்று நோயாளிகளை கவனிக்கப்படுகிறது.

ஸ்ரீ ஹெக்கடே அவர்கள் பீடாதிகாரியாக இருக்கும் இந்த 6 வருஷங்களில், கர்நாடக ராஜ்யத்தின்

அநேக பாகங்களுக்கு விஜயம் செய்து, தர்மம், பக்தி, சதாசாரம், மதம், முதலிய விஷயங்களைப்பற்றி உபன் யாசங்கள் செய்து, மக்களை நல்வாழ்வு வாழ வற்புறுத் தினர்.

1974-ம் ஆகஸ்டு மாதம் தட்சிண கன்னட ஜில்லா விலிருக்கும் எல்லா நதிகளிலும் மாபெரும் வெள்ளம் வந்து, மக்களுக்கு விபரீத கஷ்டங்கள் ஏற்பட்ட சமயம் ஸ்ரீ ஹெக்கடே அவர்கள் வெள்ளத்தினல் பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்கு 1400 வேட்டியும், 1400 சேலையும் தர்ம மாக வழங்கினர்கள்.

நோயாளிகளுக்கு வைத்தியம் செய்து கொள்ள உதவியும், சக்தியிலலாமலிருக்கும் மாணவர்களுக்கு படிப் புதற்காக உதவியும், மற்ற அநேக நல்ல காரியங்களுக்கு தாராளமாக நன்கொடையும், ஸ்ரீ ஹெக்கடே அவர்கள் இந்த 6 வருஷகாலத்தில் கர்நாடக ராஜ்யத்தில் மட்டு மல்லாது வெளியூர்களிலும் நிறைய தான தர்மங்கள் செய்து, மக்களின் பேரன்பைப் பெற்றிருக்கிருர். 'பணம் இருக்கலாம், கொடுக்க மனம் வேண்டுமே' கொடுத்து வைத்தவர்களுக்குத்தான் இது முடியும்.

மேல் விவரிக்கப்பட்ட இவ்வளவு காரியங்களையும் குறிகிய காலமாகிய 6 ஆண்டுகளில், ஸ்ரீ ஹெக்கடே அவர்கள் செய்திருப்பது மிகவும் போற்றத்தக்கது. தூய மனதுடன் தன் கடமையை, பக்தி, சிரத்தை, தியாகம், முழு மனதோடு செய்திருக்கிருர்.

ஒரு ஸ்தாபனம் ஓங்கி வளரவும் அது வெற்றி பெறவும் முக்கிய காரணமாயிருப்பது அதன் சொந்தக் காரனின் விடா முயற்சியும் உழைப்புமே காரணம் என்று ஒரு பெரியார் கூறியுள்ளார். அது மிகவும் சரி. நம்

தேசத்தில் அநேக நல்ல ஸ்தாபனங்கள் ஓங்கி வளர்ந்து நடைபெறுவதை நாம் பார்க்கும்போது அது நன்ருய்த் தெரிகிறது. ஸ்ரீ தர்மஸ்தல க்ஷேத்திரமும் அதைச் சார்ந்த ஸ்தாபனங்களும் இன்று இவ்வளவு புகழ் பெற்று ஓங்கி வளர்ந்து நம் தேசத்தில் ஒரு பெருமைபடக்கூடிய க்ஷேத்திரமாக விளங்குவதற்கு முக்கிய காரணம், இதன் சொந்தக்காரர்களான ஸ்ரீ ஹெக்கடே அவர்களின் பெரு முயற்சியும், தியாகமுமே காரணம். ஸ்ரீ க்ஷேத்திரம் உற்பத்தியான காலம் முதல் இன்று வரை ஸ்ரீ ஹெக்கடே அவர்களின் பரம்பரையே இதை நடத்திக்கொண்டு அபிவிருத்தி செய்து கொண்டு வந்திருப்பதே இச்க்ஷேத்திரத்தின் மேன்மைக்கும் புகழுக்கும் காரணமாயிருக்கின்றது, இவ்வளவு காரியங்களை செய்து கொண்டு நல்ல பெயருடன் பிரகாசிக்கும் இச்க்ஷேத்திரத்தின் பீடாதிகாரிகளாயிருக்கும் தர்மபூஷண - ஸ்ரீ தர்மஸ்தல வீரேந்திர ஹெக்கடே அவர்களுக்கு, ஸ்ரீ மஞ்சுநாத சுவாமி, ஸ்ரீ சந்திரநாத சுவாமி, ஸ்ரீ தர்ம தேவதைகள், நீண்ட ஆயுளும், நல்ல ஆரோக்கியமும், நிறைந்த செல்வமும், எடுத்த எல்லா காரியங்களில் வெற்றியும் அருள் செய்து, இச்க்ஷேத்திரத்தின் பீடாதிகாரிகளாக நீண்ட காலம் சேவை செய்ய அனுகிரகம் செய்ய வேண்டுமாய் பிரார்த்திப்போமாக.

கோயில் அலுவகளும், பூஜை முறைகளும்

காலை 5–30 மணிக்குள் கோயில் கதவுகள் திறக்கப்படும், பிரதிதினமும் காலை ஸ்ரீ மஞ்சுநாத சுவாமி சன்னதியில்—பரமான்னுதி பூஜை, பஞ்சாம்ருத அபிஷேகம், ஏகா தசருத்திர பாராயணம், வேதபாராயணம், சகஸ்ரநாம பூர்வக வில்வார்ச்சனை, சடஜபம், கந்தஜபம், அங்கப்பிர தட்சிணம் முதலியவைகளும், ஸ்ரீ அம்மன் சன்னதியில் பவமான பூஜை, தேவி மஹாத்மிய பாராயணம், சகஸ்ர

நாம பூஜை முதலியவைகளும், ஸ்ரீ கணபதி, ஸ்ரீ அன்னப் பசுவாமி சன்னதிகளில் முறையே வேறு பூஜைகளும் நடைபெறுகின்றன.

சேவைகள் செய்ய விரும்பும் யாத்ரீகர்கள் கோயில் அலுவலகத்தில் ''சேவைகள் விவரம்'' என்றும் அச்சிட்ட இதழ் பெற்றுக்கொண்டு அதன்படி அவரவர் கள் விருப்பப்படி சேவைகள் செய்யலாம்.

காலை 8 மணி முதல் மத்தியானம் மகாபூஜை ஆகும் வரையில் பக்தாதிகள் சுவாமி தரிசனம் செய்ய லாம். பஞ்சாம்ருத அபிஷேகம் முதலிய சேவைகள் காலை 9 மணிக்குள் ஆரம்பமாகிறது. தேங்காய், பழம் இவை கள் சுவாமிக்கு நைவேத்தியமானவுடன், கோரிக்கை காணிக்கை, முடிப்பு முதலிய பிரார்த்தனைகள் சுவாமிக்கு செலுத்தப்பட வேண்டும். பக்தாதிகள் தங்கள் மனதில் வேண்டிக்கொண்ட பிரார்த்தனைகளையோ, குறை களையோ, கஷ்டங்களையோ பகல் மகா பூஜையாவதற் குள்ளாக ஸ்ரீ மஞ்சுநாதேஸ்வரா சுவாமியின் முன்பு தெரி வித்து பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

பிறகு மகா பூஜையாகும். பலி பூஜையாகி கோவில் கதவுகள் மூடப்படும். மாலை 5-30 மணிக்கு கோவில் கதவுகள் திறக்கப்பட்டு முறைப்படி அபிஷேகம், தீவட்டி சேவை முதலியவைகள் ஒன்றன் பின் ஒன்ருக நடக்கும். மாலை 7 மணிக்கு சுவாமிக்கு மகாபூஜை நடத் தப்பட்டு சரியாக இரவு 9 மணிக்கு கோவில் கதவுகள் மூடப்பட்டு சீல் வைக்கப்படும். உற்சவ காலங்களில் இந்த முறையில் மாறுதல்கள் இருக்கும்,

கோவிலுக்குள் செல்லும்போது அனுசரிக்க வேண்டிய முறைகள்

கோவில் உள் பிரகாரத்திற்குச் செல்லும் வாசற்படியில் காவலாளிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். அவர்கள் உத்தரவை மீறிகொண்டு உள்ளே போகக் கூடாது. எந்தெந்த சமயத்தில் யார் யாரை உள்ளே விட வேண்டுமோ அந்தந்த சமயத்தில் அவர்கள் விடுவார்கள். மிகுந்த பயபக்தியுடனும், ஸ்நானம் செய்து துவைத்து உலர்த்தின தூய ஆடைகள் அணிந்து கொண்டு, நெற்றியில் திலகம் அணிந்து கொண்டு கோட்டு, ஷர்ட்டு, பனியன் இவைகளையெல்லாம் கழற்றிவிட்டு துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு, சுத்தபாவனையுடன் உள்ளே செல்ல வேண்டும். ரத்தம் எச்சில், சொள்ளு முதலியவை பெருகுவோரும் தொத்து வியாதி சம்பந்தமான நோயாளிகளும், பேய், பிசாசு பிடித்தவர்கள், பைத்தியம், வலி முதலியன உடையவர்களும், சிறு குழந்தைகளும் ஆகிய இவர்கள் எல்லாம் உள்ளே கண்டிப்பாய் போகக்கூடாது. இவர்கள் அனுமதிக்கவும் படமாட்டார்கள். யாத்ரீகர்கள் இது விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டியது. அத்துமீறி அம்மாதிரி யாராவது உள்ளே சென்று சந்நதியை அசுத்தப்படுத்தி விட்டால் அதற்காக சம்ரோஷணை செய்து, கலசாபிஷேகம் செய்ய நேரிடும். இதற்காக ஏற்படும் செலவை யார் அசுத்தபடுத்தினர்களோ, அவர்களிடமிருந்து வசூல் செய்யப்படும். இச்செலவை அவர்கள் தான் ஏற்றுக் கொள்ள நேரிடும்.

உள் பிரகாரத்திற்கு செல்லும் வாயிற்படியின் வெளிப்புறத்தில் சுவாமி சந்நதிக்கு எதிரில் ஒரு பெரிய தட்டு அல்லது தாம்பாளம் வைக்கப்படும். கோரிக்கை காணிக்கை, முடிப்பு முதலிய பிரார்த்தனை பணங்கள்

எல்லாம் இத்தட்டில் சமர்ப்பிக்க வேண்டும். கன்னடத்தில் ஒரு நல்ல பழமொழி சொல்லுகிருர்கள். அது என்னவென்ருல் ''மாதுபிடா மஞ்சுநாதா'' என்பது அதற்கு அர்த்தம் ஸ்ரீ மஞ்சுநாத சுவாமியின் பெயரில் எதைச் சொல்லிக் கொண்டாலும் அதன்படி திரிகரண சுத்தியுடன் நடந்து கொள்வதுடன் சொல்லிக் கொண்ட வார்த்தைகளின்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதே. அப்படி செய்யத் தவறிஞல் அதற்குத் தக்க தண்டனை அவர் கொடுப்பார். ஆகையால் பக்தர்கள் இதை மனதில் ஞாபகம் வைத்துக் கொண்டு எதையும் முன் ஜாக்கிரதையுடன் தீர ஆலோசித்து, யோசனை செய்து, அவர் முன் சொல்லிக் கொள்ள வேண்டும். ஸ்ரீ மஞ்சுநாத சுவாமிக்கு பக்தர்கள் சமர்ப்பிக்கும் காணிக்கைகளை விட அவர்கள் சொல்லிக் கொண்ட வார்த்தைகளின்படி நடந்து கொள்வதே அவருக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும். இச்சமயம் திரு. ஹெக்கடே அவர்களும் வந்து கோவிலுக்குள் தன் பீடத்தில் அமர்ந்திருப்பார். இவருடைய பிரதிநிதிகள் மூவரும் வந்திருப்பார்கள். பிரார்த்தனை காணிக்கைகளைச் செலுத்திவிட்டு பக்தாதிகள் தாங்கள், தங்கள் கஷ்ட சுகங்களை அச்சமயம் சொல்லிக் கொள்ள வேண்டும் அம்மாதிரி சொல்லிக் கொள்வதற்கு முன் சுவாமிக்கு ஒரு ரூபாய் காணிக்கை தட்டில் சமர்ப்பித்துவிட்டு பிறகு குறைகளை சொல்லிக் கொள்ள வேண்டும். அவரவர்கள் குறைகளுக்கு தகுந்த பரிகாரம் சொல்லப்பட்டு சுவாமி பிரசாதம், கந்தம், புஷ்பம், தீர்த்தம் இவைகள் கொடுக்கப்படும்.

ஸ்ரீமான் ஹெக்கடே அவர்கள் பக்தர்களின் குறைகளை எல்லாம் தீர்த்து வைக்க ஸ்ரீ மஞ்சுநாத சுவாமியை பிரார்த்தித்துக்கொண்டு எல்லோருக்கும் ஆசி கூறுவர். திரு ஹெக்கடே அவர்கள் சொல்லும் பரிகாரத்திலும்,

அவர்கள் வார்த்தைகளிலும் முழு நம்பிக்கை வைத்து பயம், பக்தி சிரத்தையுடன் நடந்து கொண்டால் ஆண்டவன் அருள் கிடைத்து எல்லா குறைகளும், துன்பங்களும் தீர்ந்து பிரார்த்தனைகளும் நிறைவேறும். இம்மாதிரி பலன் கிடைத்து சௌகர்யமடைந்தவர்கள் கர்நாடகத்திலும் மற்ற இராஜ்யத்திலும் பல்லாயிரக்காணக்கானவர்கள் இருக்கின்றனர்.

இம்மாதிரி சமர்ப்பிக்கப்படும் கோரிக்கை, காணிக்கை முடிப்பு முதலிய பணத்தைக்கொண்டு கோயிலில் நடைபெறும் பலவிதமான கைங்கரியங்களுக்காகவும், சேவைகளுக்காகவும், கோவில் பரிபாலனத்துக்காகவும் உபயோகப் படுத்தப்படுகிறது. அதுமட்டுமின்றி கோவில் கட்டிடங்களைப் பராமரித்து புதிய நிர்மாணங்கள் முதலியவைகளை செய்யவும், பக்தகோடிகளின் சௌகர்யத்திற்காக பல வசதிகள் செய்யவும் உபயோகப்படுத்தப்படுகிறது

தவிர தானங்களில் சிறந்ததானம் அன்னதானம், அபயதானம், ஔஷத தானம், வித்யா தானம் என்ற நான்கு வகைப்பட்ட தர்மங்கள் சிறப்பாக நடத்தப்படுகிறது. திரு ரத்தினவர்மா ஹெக்கடே அவர்கள் பட்டத்துக்கு வந்தவுடன் தர்மஸ்தலம், சுமார் 90 வருஷ காலமாக விஜயம் செய்யாதிருந்த ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகள் விஜயம் செய்து பாகவானை தரிசித்து இங்கு நடக்கும் தான தர்மாதிகளைக்கண்டு புகழ்ந்து இக்காலத்தில் இவைகளை இவ்வளவு பக்தி சிரத்தையுடன் நடத்திக்கொண்டு வரும் திரு ரத்தினவர்மா ஹெக்கடே அவர்களை மிகவும் பாராட்டி அவருக்கு ராஜ மரியாதை செலுத்தி கௌரவித்து ஆசீர்வதித்துச் சென்றார்கள்.

யாத்ரீகர்களின் வசதிகளும் அவர்கள் கவனிக்க வேண்டியவைகளும்

இச்க்ஷேத்திரத்தில் யாத்ரீகர்கள் தங்குவதற்காக தர்ம சத்திரங்களும், பிரயாணிகள் விடுதிகளும் இருக்கின்றன. யாதொரு தொந்திரவும் இல்லாமல் மூன்று தினங்கள் வரை இவைகளில் இலவசமாக தங்கலாம். சாப்பாடு, சத்திரத்தில் பிரதி தினம் எல்லோருக்கும் அளிக்கப்படுகிறது. அதில் இலவசமாகவே சாப்பிடலாம்.

இரண்டு, மூன்று இடங்களில் தனித்தனியாக சமையல் நடக்கிறது. பிராமணர்களுக்கு பிரத்தியோகச் சத்திரம் உண்டு. சத்திரங்களில் சாப்பிட விரும்பாதவர்களுக்கு எல்லாவிதமான சாமான்களும், பாத்திரங்களும், மற்ற சமையல் செய்துக் கொள்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படும். இரவில் சாப்பிடாதவர்களுக்கு பலகாரமும் கொடுக்கப்படும்.

யாத்ரீகர்களுக்கு உடல் நலம் குன்றி இருந்தால் அவர்களுக்கு இலவசமாக மருந்தும், சிகிச்சையும் செய்ய மருத்துவ மனை ஒன்றும் இருக்கிறது. இது தவிர தர்மங்களும் வழங்கப்படுகின்றன.

யாத்ரீகர்களின் சௌகரியத்திற்காக ஒரு கிளை அஞ்சல் நிலையமும் இருக்கிறது. நல்ல சுத்தமான பலகாரங்கள் முதலியன தயார் செய்து விற்கும் பிராம்மண சிற்றுண்டி விருதிகளும், பல அங்காடிகளும், எல்லாவிதமான சாமன்களும் கிடைக்கக் கூடியதான ஒரு சிறிய கடை வீதியே இங்கு இருக்கிறது.

தேவஸ்தான சம்பந்தப்பட்ட தேவைகளுக்காக வேண்டிய எல்லாவிதமான சாமான்களும் சேகரித்து

வைத்து தினந்தோறும் விநியோகம் செய்வதற்காக ''ஜமா உக்ராணம்'' என்ற பெரிய அங்காடி ஒன்று இருக்கிறது,

பெரிய உத்தியோகஸ்தர்கள் முதலியவர்கள் தங்குவதற்கு பிரத்தியோகமான இட வசதிகள் இருக்கின்றன. மற்றபடி இட சுகாதாரம், தண்ணீர் விநியோகம், மராமத்துக்கள் இவைகளை எல்லாம் கவனிக்க கிராம பஞ்சாயத்து கவுன்சில் ஒன்று இருக்கிறது.

பிரதி தினமும் இச்க்ஷேத்திரத்திலிருந்து பஸ் போக்குவரத்துகளும், வாடகை ஊர்திகளும் போக்குவரத்து சாதனங்களுக்கு மிகவும் உதவியாயிருக்கின்றன. யாதொரு விதத்திலும் குறைவு இல்லாமல் எல்லாவிதமான வசதிகளும் யாத்ரீகர்களுக்கு இச்க்ஷேத்திரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது.

யாத்ரீகர்கள் க்ஷேத்திரத்திற்கு வந்தவுடன் கோவிலின் வெளிபாகத்திலிருக்கும் அலுவலகம் பாரபத்தியக்காரரிடம் தங்கள் இட வசதிகளுக்கும், உணவு விஷயத்திற்கும் கேட்டு தெரிந்து கொண்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டியது. சத்திரங்களில் சாப்பிட விரும்பாதவர்கள், சமையல் செய்து கொண்டு சாப்பிடுவதாகயிருந்தால் அதற்கு வேண்டிய சாமான்களையும் அவரை கேட்டு பெற்று க்கொள்ள வேண்டியது.

யாத்ரீகர்கள் புண்ணிய நதியாகிய நேத்ராவதிக்கு சென்று ஸ்தானம் செய்து வரலாம். ஆடைகளையும் சுத்தமாக தோவைத்து உலர வைத்துக் கட்டிக்கொண்டு ஆலயத்திற்கு போகலாம் அப்படிச்செய்ய முடியாதவர்கள் கோயிலுக்கு எதிரிலிருக்கும் பூந்தோட்டத்திலிருக்கும் கிணற்றின் ஸ்தானம் செய்யலாம். சுவாமிக்கு சேவைகள்

செய்ய விரும்புவோர் காலை 9 மணிமுதல் 11 மணிக்குள்ளாக கோயில் அதிகாரிகளிடம் சென்று பணம் செலுத்தி ரசீதுகள் பெற்றுக் கொள்ள வேண்டும். சுவாமிக்கு தேங்காய், பழம் மட்டும் சமர்ப்பனை செய்ய விரும்புகிறவர்கள், கோயிலுக்கு எதிரிலிருக்கும் தேவஸ்தான கடையில் அவைகளை வாங்கி பூஜையாவதற்கு முன்பு அவைகளை சன்னதியில் சேர்ப்பிக்க வேண்டும்.

யாத்திரீகர்களின் சௌகரியத்திற்காகவும், அவர்கள் யாதொரு கஷ்டமுமின்றி ஸ்ரீ சுவாமியை தரிசிப்பதற்காகவும், அதிக மக்கள் நெருக்கமிருக்கும் சமயம், சுலபமாக கோயிலின் உட்பிரகாரத்திற்கு செல்லவும் இவைகளை எல்லாம் 'ஒலிபெருக்கி' கருவியின் மூலம் அநேக முறை, அனுசரிக்க வேண்டிய முறைகளை பற்றி யாத்ரீகர்களுக்கு, கோயிலில் இருக்கும் 'மைக் அலுவல'க்த்திலிருந்து சொல்லப்படும். யாத்ரீகர்கள் அதைக் கேட்டு அதன்படி நடந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதுவுமன்றி தேவஸ்தான சிப்பந்திகளுடனும் ஒத்துழைத்து ''வரிசையாக'' நின்று, தேவஸ்தானத்தின் உட்புறம் சென்று, அவரவர்கள் சேவையை. சாந்தியுடனும், சமாதானத்துடனும், ஒழுங்காகவும், பக்தி சிரத்தையுடனும் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புனிதமான தேவாலயத்தின் தெய்வீக உணர்ச்சிகளுக்கு அனுகூலமாக நிசப்தமாயிருந்து அவரை தியானித்து அவர் அருளைப்பெற முயலவேண்டும். அசதியும், தூக்கமும், நிம்மதியின்மையும், கஷ்டங்களும் நிறைந்த இந்த சம்சார யாத்திரையில், இப்படிப்பட்ட புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு வரும் சமயத்திலாவது அவற்றையெல்லாம் கொஞ்சம் மறந்து, ஆண்டவன்பால்

மனதை செலுத்தி அவன் திவ்விய நாமத்தை ''நாம ஜபம்'' செய்து பயனடைய முயல வேண்டும்.

பெரிய சேவைகள், உற்சவங்கள், சாஸ்வதமான சில கைங்கர்யங்கள் செய்ய விரும்புவோர், கோவில் மணியகார் மூலம் திரு. ஹெக்கடே அவர்களிடம் தெரிவித்து அவர் சொல்படி செய்து கொள்ள வேண்டியது துலாபாரம், பேச்சு தீர்மானம் (வீட்டில் அல்லது குடும்பத்தில் சண்டை சச்சரவு மூலம் வரும் வித்தியாசங்கள்) இவைகள் எல்லாம் திரு. ஹெக்கடே அவர்கள் முன்னிலையிலும், அவர்களாலுமே செய்யப்படவேண்டும். கோவிலுக்கு காணிக்கைகளை, எவ்வித காரணத்தாலும், வேறு யாரிடமும் கொடுக்கக் கூடாது. அவைகளை நேராகவே கொண்டு வந்து செலுத்த வேண்டும் அப்படி வந்து செலுத்த முடியாவிட்டால் மணியார்டர் மூலம் திரு. ஹெக்கடே அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

யாத்ரீகர்களுக்கு, தேவாலய சிப்பந்திகள் சரியானபடி உத்திரவு சொல்ல தவறினும், மற்றபடி யாதொரு தொந்திரவுகள் நேர்ந்தாலும், அவைகளை திரு. ஹெக்கடே அவர்களுக்கு நேரில் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

சர்வ தர்ம சம்மேளனம்

சர்வ தர்ம சம்மேளனம் 1933ம் வருடம் காலஞ் சென்ற திரு. மஞ்சையய ஹெக்கடே அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை நடந்து கொண்டு வருகிறது. அது பிரதி வருஷமும் கார்த்திகை மாதம் (நவம்பர்–டிசம்பர்) லட்ச தீப உற்சவ சமயம் நடத்தப்படுகிறது ஒரு நாள் தர்ம சம்மேளனம், மற்றொரு நாள் சாஹித்திய சம்மேளனம், என்று இரண்டு தினங்கள் நடைபெறுகின்றன.

அச்சமயம் அநேக சம்பிரதாயங்கள், பல்வேறு மதங்களைச் சேர்ந்த வித்வான்கள், கவிகள் முதலியோர் அழைக்கப் பட்டு அவர்கள் மூலம் அவரவர்கள் மத சம்மந்தமான விஷயங்களைப் பற்றியும் முக்கியமாக எல்லா மதங்களில் இருக்கும் கட்டுபாடுகளும், குறிகளும், ஒன்றே பொரு ளாகிய கடவுளையே நாடி அநேக விதங்களில் அவைகளை விளக்கி இருக்கின்றன-என்ற விஷயத்தைப்பற்றி உபன் யாசங்கள் நடத்தப்படுகின்றன.

"ஏகம் சத் விப்ரபஹுதா வதந்தி"

சத்தியமான பொருள் ஒன்றே, ஆனால் அது பல பெயர்களில் அழைக்கம்படுகின்றது. என்ற கருத்தையும் ஒவ்வொரு மதாச்சார்யர்கள், அவரவர்கள் காலங்களில் இருந்த சூழ்நிலைக்கு சரியாக ஒன்றேயான பரம்பொருளை பல பெயர்களில், பல வழிகளில் விளக்கிக் காட்டி, அதன் மூலம் மக்களுக்கு சன்மார்க்க வழிகளைக் காட்டி, நல் லொழுக்கத்தையும், உயர்ந்த நெறிகளையும் போதனை செய்திருக்கிறார்கள் என்பதையிம்-மக்களுக்கு எடுத்துக் கூற இந்த இரண்டு நாள் நடக்கும் சம்மேளனங்கள் உப யோகப்படுத்தப்படுகின்றன.

மதத்துவேஷமில்லாமல், எல்லா மதங்களின் மீது வெறுப்பின்மை, எல்லா மதங்களிலுள்ளடங்கி இருக்கும் கட்டுபாடுகள் மீது மரியாதை இவைகளை அதிக பிரசாரம் செய்வதே இந்த சம்மேளனங்களின் முக்கிய குறிக்கோள்.

எல்லா மத குருக்களும் முயற்சித்து அந்தந்த காலங்களில், மக்களின் ஆத்ம சக்தியைப் பற்றியும், மனி தனின் உன்னத ஸ்தானத்தைப் பற்றியும், மனித வர்க்கம் கெட்ட வழிகளில் செல்லாமல் நல்ல பண்பிலே வாழ வேண்டியிருக்கும் அவசியத்தைப் பற்றியும், நூல்கள் இயற்றி வழிகாட்டிச் சென்றிருக்கின்றனர்.

''வழிகள் பலவாயினும், குறி ஒன்றே''

இந்த உலகத்தை உற்பத்தி செய்த பரமாத்மா, உலகத்திலிருக்கும் மக்களுக்கு தன் திருவிளையாடல்களை இம்மகான்கள் திருவாக்குகளின் மூலம் பிரசாரப்படுத்தி, இவ்வுலகத்தில் எல்லோரும் சுக ஜீவிகளாகவும், சாந்த, சத்குண நல்லவர்களாகவும் வாழ்ந்து பரமானந்த பிராப்திக்கு உரியவர்களாக அனுக்கிரகம் செய்துக் கொண்டு வருகிறார்.

ஆகையினால் இந்த ஆன்ம சாட்சாத்காரத்தை அடைய நாம் ரூபபேத உணர்ச்சிகளைப் போக்கி, அனைத்தையும் ஒன்றாய் காணும் பக்குவம் வர வேண்டும். வேற்றுமைகளினூடே ஒருமை காண பயில வேண்டும். இந்த ஒருமையைப் பயின்று அடையும் சாதனையில் காரணப் பொருளும், காரிய விளைவும் வெவ்வேறல்ல என்றும், காரண, காரியம் இரண்டும் ஒன்றேயென்றும் உணர்வதே வழி, படைப்பு முழுவதும் படைப்போன் விளக்கமே.

பார்க்கும் பொருள்கள் அனைத்திலும் கடவுளைக் காண்பதின் மூலமே இந்த ஒருமையை சாதிக்க முடியும் தோற்றமும், நடுவும், இறுதியும் பரம் பொருளே. போகமும், போகியும் அவனே. மிகவும் உயர்ந்ததும், மிகத் தாழ்ந்ததும் அவனே. அறிபவனும், அறியப்படுவதும் அவனே. பேசப்படும் சொல்லும், சுவாசிக்கின்ற மூச்சும் அவனே, சேதனப் பொருளும், சைதன்யமும் அவனே. இதை கடைப் பிடிப்பவனுக்கு கடவுள் ஒருவன் மட்டுமே உண்மையில் உள்ளான் என்று உணர்ந்து கொள்வது எளிதாகும்.

அவரை விட்டு வேறானதொன்றோ அவரைக் கடந்து நிற்பதான ஒன்றோ யாதொன்றுமில்லை என்பது விளங்கும். இந்த உண்மையை நன்கு விளக்கவே இந்த

சர்வ தர்ம சம்மேளனம், சாகித்ய சம்மேளனங்கள் கடந்த 37 வருடங்களாக இங்கு நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

கார்த்திகை மாதம் நடக்கும் லட்ச தீப உற்சவத்திற்கு வரும் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் இவைகளில் கலந்து கொண்டு நடக்கும் உபன்யாசங்களைக் கேட்டு உண்மை விஷயத்தை நன்கு தெரிந்து கொண்டு பயனை அடைந்து வருகிருர்கள்.

மனித ஜன்மத்தின் பிறப்பும் தீர்த்த யாத்திரையின் பயனும்

''எண்ணறிய பிறவிதனில் மானிடப் பிறவி அறிது'' என்ற ஆன்ஞேர் வாக்குப்படி, நாம் அநேக ஜன்மங்கள் பசு, பக்ஷி, மிருகங்கள் முதலியனவாகப் பிறந்து பிரதி ஒரு ஜன்மத்திலும் செய்த நல்வினைப் பயன் காரணமாக நமக்கு இந்த மனித ஜன்மம் கிடைத்திருக்கின்றது. இது மிகவும் சிரேஷ்டமான ஜன்மம். நல்லது, கெட்டது என்று ஆராய்வதற்கும், ''நான் யார்?'' ''என் உருவம் என்ன?'' ''நான் செய்ய வேண்டியவைகள் யாவை?'' எது நித்தியம், எது அநித்தியம் என்றெல்லாம் சிந்தனை செய்ய இந்த மானிட சரீரத்தில் தான் ஆண்டவன் நமக்கு ''பகுத்தறிவை கொடுத்திருக்கிருர் இந்த சரீரத்தில் இருக்கும்போது தான், நாம் நம்மையறிந்து, ஈசனையறிந்து. தியானம், தியாகம், பக்தி, வைராக்கியம், யோகம் முதலிய சாதனைகள் மூலம், ஞான ஒளிப்பெற்று, அதன் மூலம் இறப்பு, பிறப்பு என்ற பிணியினின்றும் விடுபட்டு மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைய முயல வேண்டும்,

இப்படிப்பட்ட சிரேஷ்டமான மானிட ஜன்மமும் அனித்தியானதே. வேத சாஸ்திரப்படி மனிதனுக்கு வயது நூறு. அதில் ஐம்பது வருடம் நித்திரையிலும்'

பதினைந்து வயது இளமையிலும், போனபின் மிகுதியுள்ள முப்பத்தைந்தில், நாம் அனுபவிக்கும்படியாயிருப்பவைகள் பிணி, பசி, மூப்பு, துன்பம் முதலியவைகள் இவைகளின் மத்தியில் நாம் நேரம் எடுத்துக் கொண்டு மேலே சொன்ன சாதனைகளைச் செய்ய அதிக சிரத்தையுடன் பிரயத்தனப்பட வேண்டும். நாம் நூறு வயது இருப்பது என்ன நிச்சயம்? இறுதிக்காலம் எந்த சமயத்தில் வரும் என்பது நமக்கு தெரியாது. அது நம் அருகிலேயே இருக்கிறது. எந்த நிமிடத்திலும் வரலாம், என்பதை எப்பொழுதும் மனதில் ஞாபகம் வைத்துக் கொண்டு, நம்மைச் சுற்றிலும், காணப்படும் அனைத்திய வஸ்துகளாகிய பந்து மித்திரர்கள், சொத்து சம்பத்துகள், பதவி பட்டங்கள் முதலியவைகளின் மேல் இருக்கும் பற்றைக் களைந்து ஆசாபாசங்களினின்றும் விடுபட்டு நித்திய வஸ்துவாகிய பரமாத்மனிடத்தில் அதிக பற்று வைத்து, ஈஸ்வர சிந்தனை, நாம சங்கீர்த்தனம், நாம ஜபம் முதலியவைகளில் அதிகமாய் கவனம் செலுத்தி சாத்தியமான வரையில் மற்றவர்களுக்கு நல்லவைகளையும், தானம், தர்மம், பரோபகாரம் முதலிய புண்ணிய காரியங்களையும் செய்ய ஆர்வங்கொள்ள வேண்டும். நாம் பிறக்கும்போது எவ்வகையில் தோன்றினோமோ அதே வகையில் தான் இறக்கும் சமயத்திலும் போக வேண்டும். நம் கூட வருவது ஒன்றுமில்லை.

''காதற்ற ஊசியும் வராது காண்
கடை வழிக்கே''

என்ற பட்டினத்தார் வாக்குப்படி எல்லாவற்றையும் இங்கே விட்டுத்தான் செல்ல வேண்டும். நாம் செய்த பாவ, புண்ணிய, நல்வினை தீவினை-கர்மங்களே நம்முடன் வருகின்றனவைகள்.

இதைத் தெரிந்து கொண்டு, தீவினைகளையெல்லாம் நாளுக்கு நாள் அகற்றி, நல்வினைகளை அதிக

மாகச் செய்ய இந்த மானிட ஜன்மத்தில் நாம் திட சங்கல் பத்துடன் முயல வேண்டும். இந்த நிலை மனிதனுக்கு வர அநேக சாதனங்களில் முக்கியமானவைகள். நல்லொழுக்கம், சன்மார்க்கம், சத்சங்கம், தீர்த்த யாத்திரை சாது சத்புருஷர்களது ஆகி முதலியனவாம்.

மகான்கள், மகா ரிஷிகள், சித்த புருஷர்கள், யோகிகள் முதலியோர் வாசம் செய்து சித்தியடைந்ததும் அறிஞர்கள், ஞானிகள், பெரியோர்கள் சென்று தரிசித்து அதன் புகழைப் பாடியிருப்பதும், பரமாத்மா தன் பக்தர்களுக்காக தன் லீலாவிநோதத்தை பல இடங்களில் பல உருவங்களில் தோன்றி அனுக்ரகம் செய்து ரட்சித்த இடங்களே புண்ணிய க்ஷேத்திரங்களாகும். அந்த க்ஷேத்திரங்களின் சமீபத்தில் ஓடும் நதியும் புண்ணிய தீர்த்தமாகும்.

ஆண்டவன் அருளைப் பெற விரும்பும் சன்மார்க்கர்கள் பொருட்டு அவர் தமது அருள் விளக்கத்தை மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றிடத்தும் சிறப்பாக விளக்க முறும்படிச் செய்து அவைகளிலே முறையே பயில்கின்றவர்களுக்கு தமது நித்தியானந்தப் பெருவாழ்வை தந்து அருளுவர். இதனுல் துக்க நிவர்த்தி, பரமானந்த பிராப்தி கிடைக்கப்படுகிறது.

சர்வ வியாபியாய், எங்கும் நிறைந்துள்ள ஆண்டவன் பாலில் நெய் போல் மறைந்து நிற்பர், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றிடத்தும் தயிரினிடத்து நெய் போல் எளிதிலே முயன்று காணத்தக்கவராக விளங்கி இருப்பார்.

பசுவினுடைய உடம்பெங்கும் வியாபித்துள்ள பாலானது. அதன் கன்றுக்கு அதன் மடியிலிருந்து வெளிப்படுதல் போல தம்மை வழிபடும் அடியவர்களுக்கு

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றிடத்தும் தமது பெருங்கருணையினால் வெளிப்பட்டருளுவர். அதற்காகவே மனிதன் ஜீவ காலத்தில் ஒரு தடவையாவது தீர்த்த யாத்திரை செய்து வரவேண்டியது அவசியமாகிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூவகைச் சிறப்பும் ஒருங்கு பெற்று விளங்கும் சிறந்த புண்ணிய க்ஷேத்திரங்களில் தர்மஸ்தலம் மிகவும் பிரசித்தி பெற்ற க்ஷேத்திரமாகும்.

மூர்த்தி ஸ்ரீ மஞ்சுநாத சுவாமி, தலம் நான்கு வகையான சாதுர் தர்மங்கள், அதாவது அன்னதானம், வித்தியா தானம், ஔஷத தானம், அபய தானம். பிரதி தினமும் நடந்து கொண்டு வரும் தர்மஸ்தலம் தீர்த்தம், இந்த க்ஷேத்திரத்தின் வடபாகத்தில் சுமார் 1½ மைல் தூரத்தில் ஓடும் புண்ணிய நதி நேத்திராவதி.

இம்மூவகைச் சிறப்பும் கொண்ட இப்புண்ணிய க்ஷேத்திரத்திற்கு வரும் பக்தர்கள் மனோ, வாக்கு, காயம் என்ற திரிகரண பரிசுத்த பாவனையுடனும், பக்தி சிரத்தையுடனும் வந்து, பகவானை தரிசித்து அவர் கிருபையைப் பெற வேண்டியவர்களாயிருக்கிறார்கள். க்ஷேத்திரத்திலிருக்கும் சமயம் பக்தி மார்க்கத்தில் பரவசராய், ஜபம், நாம சங்கீர்த்தனம், ஆத்ம சிந்தனை, ஆண்டவன் சேவை இவைகளிலேயே அதிக கவனம் செலுத்தி தீர்த்த யாத்திரையின் பயனைப் பெற வேண்டும்,

அதிக சௌகரியங்களையும், ஆடம்பரங்களையும் வெறுத்து தாழ்மையுடனும் சாந்த பாவனைகளுடனும், க்ஷேத்திர வாசம் செய்து, சிந்தையை அவர் பால் செலுத்தி அவர் அருளை பெற முயல வேண்டும்.

இந்த க்ஷேத்திரத்திற்கு விஜயம் செய்யும், பக்தர்களின் குறைகளையும், துயரங்களையும் தீர்த்து இகபர சுகங்களை ஸ்ரீ மஞ்சுநாத சுவாமி அருள் செய்வாராக,

மங்களம்.

தர்மஸ்தல க்ஷேத்திரத்தின் தனிப்பெருஞ்சிறப்பு

இந்த க்ஷேத்திரத்தின் தனிப்பெரும் சிறப்பு என்ன வென்றால், இங்கே இந்துக்கள், ஜெயினர்கள், கிறிஸ்து வர்கள், மகமதியர்கள் முதலான பல வகுப்பினர்களும் வந்து அவரவர்கள் குறைகளையும், கஷ்டங்களையும் கடவுளிடம் முறையிட்டுக் கொள்வதும், அவைகள் பரிகார மாவதும் தவிர அநேக விதமான தனி விவகாரங்கள் குறைந்த செலவில் ஸ்ரீ மஞ்சுநாத சுவாமி ஆலயத்தில் தாக்கல் செய்யப்படுவதும், அவைகளை விசாரித்து தகுந்த முறையில் தீர்ப்பு அளிப்பதும், அந்த தீர்ப்புக்களை சம்மந் தப்பட்ட இரு தரப்பினர்கள் ஒப்புக் கொள்வதும், மற்றும் திரு, ஹெக்கடே அவர்கள் பலவிதமான பிரச்சனைகளுக்கு சொல்லும் பதிலை யாத்ரீகர்கள் பக்திசிரத்தையுடன் ஏற்று கொண்டு அதன்படி நடந்து பயனை அடைந்து வரு வது முதலியவைகளாகும்.

இந்த க்ஷேத்திரத்தில் விஜயம் செய்யும் யாத்ரீகர் கள் பயபக்தியுடன் ஸ்ரீ சந்திரநாத சுவாமி, ஸ்ரீ மஞ்சு நாத சுவாமி, அம்மனவர்கள், தர்ம தேவதைகள் இந்த க்ஷேத்திரத்தை ஸ்தாபித்து இதுவரை இதை சிறந்த முறையில் நடத்திக் கொண்டு வரும் நெல்லியாடிபீடு பரம்பரையைச் சேர்ந்த திரு. ஹெக்கடே அவர்கள் முத லானோர்களை தரிசித்து, ஆசி பெற வேண்டும். இந்த முறை இந்த க்ஷேத்திரத்தில் தொன்று தொட்டு நடந்து கொண்டு வருகிறது

இங்கு பிரதி வருடமும் கார்த்திகை மாதத்தில் நடைபெறும் ''சர்வ தர்ம சம்மேளனம்'' என்ற மகாநாட் டின் முக்கிய கட்டுபாடான எல்லா மதங்களின் சமரச ஒற்றுமை என்பது இங்கே பிரதி தினமும்நடந்து கொண்டு வருகிறது. இதுதான் இதன் புகழுக்கும் பெருமைக்கும், தனிச்சிறப்புக்கும் காரணமாயிருக்கின்றது.

அனுபந்தம் 1

வருடாந்திர திருவிழாக்கள்

1. லட்ச தீப உற்சவம்

இது தான் இச்க்ஷேத்திரத்தில் நடக்கும் பெரிய உற்சவம், கார்த்திகை மாதம், கார்த்திகை பகுள தசமி அன்று ஆரம்பமாகி அமாவாசை வரையில் நடக்கும். எங்கு பார்த்தாலும் தீப அலங்காரம் செய்யப்பட்டு சுவாமிக்கு உற்சவம் வெகு விமரிசையாக நடத்தப்படுகிறது. வெள்ளி ரத உற்சவமும் ஆனந்தமாய் நடக்கும். இந்த உற்சவத்தின்போது தான் ''சர்வ தர்ம சம்மேளனம்'' என்ற வித்வத்சபையும் கூடுகிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பல பாகங்களிலிருந்தும் இந்த உற்சவத்திற்கு வருகிறார்கள்.

2. மேஷ சங்கரமண ஜாத்ரா உற்சவம்

இது தமிழ் நாட்டில் நடக்கும் பிரம்ம உற்சவத்தை போன்றது. சித்திரை மாதம் சங்கராந்திக்கு கொடியேறி 9 நாள் வரையில் தர்ம தேவதைகளுக்கும் ஸ்ரீ மஞ்சுநாத சுவாமிக்கும் உற்சவம் நடக்கும். வெள்ளி ரத உற்சவமும் நடைபெறும். கடைசி தினம் தீர்த்தவாரி சுவாமி நேத்திராவதி ஆற்றுக்குச் சென்று தீர்த்தமாடுதல் விசேஷ பிராம்மண சந்தர்ப்பணைகளும் நடக்கும்.

3. நவராத்திரி உற்சவம்

இது புரட்டாசி மாதம் நவராத்திரி ஆரம்ப முதல் ஒன்பது தினம் வரையில் அம்மன் சன்னதியில் விசேஷ பூஜை அலங்காரங்கள் எல்லாம் நடந்து கடைசி தினம் சுமங்கலிகளுக்கும், கன்னிப் பெண்களுக்கும் சேலைகள் வழங்கப்படுகின்றன.

4. சிவராத்திரி உற்சவம்

இது தை மாதத்தில் மகா சிவராத்திரி தினம் நடக்கிறது. விசேஷ தீப அலங்காரங்கள் செய்யப்பட்டு சுவாமிக்கு விசேஷ அபிஷேகங்கள் இரவு முழுவதும் நடைபெறும். அன்று இரவு சுவாமி 'சிவராத்திரி குன்று' என்று சொல்லப்படும் குன்றுக்குச் சென்று அங்கு பூஜை உற்சவம் வெகு சிறப்பாக நடக்கும்.

6. வசந்த உற்சவம்

இது சித்திரை மாத சங்ரமண முதல் ஆரம்பமாகி 'வசந்தருது' முழுவதும் வைகாசி மாதம் முடிய நடக்கிறது. பிரதி தினமும் சுவாமிக்கு உற்சவம், சோடசோபசாரம், வசந்தம் இவைகள் நடக்கும்.

6. மகரநடாவளி உற்சவம்

இது தர்ம தேவதைகளின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் உற்சவம். இது வருடா வருடம் நடப்பதில்லை. பல வருடங்களுக்கு ஒரு முறை நடத்துவார்கள். உயர்ந்த முறையில் நடக்கும். அது வரும் சமயம் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

7. பத்தனுஜே உற்சவம்

இது பிரதி வருடமும் வைகாசி மாதம் வருவது. அன்று எல்லா தேவாலயங்களிலும் விசேஷ பூஜை, உற்சவம் முதலியன நடந்து 'கொடி' இறக்கப்படுகிறது.

மழை காலம் ஆரம்பமாகிறபடியால் அன்று முதல் அடுத்த தீபாவளி பண்டிகை வரை எல்லா உத்சவங்களும் நிறுத்தப்படுகின்றன.

திரு. வீரேந்திர ஹெக்கடே' அவர்கள்

'அன்னபூர்ணு' என்று பெயரிடப்பட்ட யாத்ரீகர்கள் சாப்பிடும் இடத்தை நல்ல முறையில் செப்பனிட்டு, எல்லாவித வசதிகளும் அமைத்து 30-11-74ல் யாத்ரீகர்களுக்காக திறந்து வைக்கப்பட்டது.

'வைசாலி' என்ற 126 அறைகள் கொண்ட தர்ம சத்திரத்தின் வேலேகள் பூர்த்தியாகி யாத்திரீகர்களின் உபயோகத்திற்காக 3-1-1975ல் பாரத உப ஜனுதிபதி திரு. பி. டி. ஜட்டி, அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஜெயின குரு மகாவீர சுவாமிகளின் 2500ம் வருட மகாவீர நிர்வாண மஹோற்சவ சமயம் பாரத தேசம் முழுவதும் கொண்டாடப்பட்டது. அச்சமயம் தர்மஸ்தலத்திற்கு கொண்டு வரப்பட்ட 'தர்ம சக்கரத்திற்கு' 8-3-75ல் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பகவான் பாஹுபலி சிலா மூர்த்தியை மலேமேல் நிர்மாணிக்கப்பட்ட பாஹுபலி விஹாரில் 25-12-1975ல் நிறுத்தப்பட்டது. இந்த கஷ்டமான வேலேயை, பம்பாய் இந்துஸ்தான் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியாரால் வெற்றிகரமாகச் செய்யப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் இச்சம்பவத்தை கண்டுகளித்தனர்.

ஸ்ரீ துவாரகாஸ்ரமம்

இப்புத்தகத்தின் ஆசிரியரும், சுமார் 28 வருட காலம் மூன்று தலேமுறை திரு. ஹெக்கடே அவர்கள் காலங்களில் ஸ்ரீ தர்மஸ்தல க்ஷேத்திரத்திற்கு மாபெரும் உயர்ந்த தொண்டாற்றியவருமான ஸ்ரீ தர்மஸ்தல க்ஷேத்திர சேவாபூஷண. சுவாமி பரமஹம்ச, சேஷாச்சார்யார

வர்களுக்குச் சொந்தமான நேத்திராவதி நதியின் வட கரையிலுள்ள 5½ ஏக்கர் நிலத்தில் அதாவது விருப்பப்படி வயதான காலத்தில் (அவருக்கு இப்போது வயது 88) நதி தீரத்தில் 'ஆஸ்ரமம்' ஒன்று கட்டி அதில் சாந்தி யுடன் கடவுளை தியானம் செய்து கொண்டு வாசம் செய்ய வேண்டும் என்ற ஆசையை பூர்த்தி செய்யும் வகையில், திரு. வீரேந்திர ஹெக்கடே அவர்கள் அழகான ஆஸ்ர மத்தைக் கட்டி அதை 15-5-1977ல் மிகவும் சிறப்பாக அவர் கையாலே திறந்து வைத்து பூஜ்ய சுவாமிகளுக்கு வழங்கினார்கள். இந்த ஆஸ்ரமத்திற்கு 'ஸ்ரீ துவாரகாஸ் ரமம்' என்றும் அதில் நித்திய ஆராதனைக்காக அதே தினம் முறைபடி ஸ்தாபனம் செய்யப்பட்ட மூர்த்திக்கு 'ஸ்ரீ துவாரகாநாதன்' என்றும் பெயரிடப்பட்டன. பூஜ்ய சுவாமிக்கு சம்சாரத்தில் விரக்தி ஏற்பட்டது. குஜராத் ராஜ்யத்திலிருக்கும் 'துவாரகா' என்ற க்ஷேத்திரத்திற்கு சென்றார். அன்று முதல் அவர் துவாரகை ஸ்ரீ கிருஷ் ணனையே ஆராதித்துக் கொண்டு வருகிறார்.

இந்த ஆஸ்ரமம் ஸ்ரீ தர்மஸ்தலத்திற்கு வரும் யாத்ரீகர்கள், நேத்திராவதி நதியில் ஸ்நானம் செய்யும் 'ஸ்னான காட்' எதிர் கரையில் இருக்கிறது

தர்மஜாக்ரிதி சம்மேளனம்

சமீப காலத்தில் இப்படிப்பட்ட மகாநாடு நடக்க வில்லை என்ற முறையில் திரு. வீரேந்திர ஹெக்கடே அவர்கள் பெங்களூர் நகரில் 4-2-1977 முதல் 6-2-1977 வரையில் மூன்று தினங்கள் ஒரு மாபெரும் மகாநாட்டை வெகு சிறப்பாக நடத்தினார்கள். அதில் எல்லா தர்மத்தை சேர்ந்த மதகுருக்கள், ஆச்சாரியர்கள், வித்வான்கள் கலந்து கொண்டு, சொற்பொழிவுகளாற்றி, தர்ம ஜாக் கிரதைக்காக தற்சமயம் கையாள வேண்டிய முறைகளை

பற்றி தீர்க்க ஆலோசனை செய்து, தகுந்த தீர்மானங்களை நிறைவேற்றினர்கள், இப்புத்தக ஆசிரியரான, சுவாமி, பரமஹம்ச-சேஷாச்சார்யாரவர்கள் இம்மகாநாட்டின் பிர தான காரியதரிசிகளாயிருந்தது. இது வெற்றி கரமாக நடக்கமிகுந்த தொண்டாற்றினரென்பது போற்றத் தக்கது.

எல்லா தர்மத்தைச் சேர்ந்த சுமார் 27 மத குருக் களும், வித்வான்களும் இம்மகாநாட்டில் கலந்துகொண்டு ஏகமனதான முடிவுகளை நிறைவேற்றினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தர்மஸ்தலத்திலும், அதைச் சுற்றியுள்ள இடங்க ளிலும், அரிஜனங்களுக்காகவும், ஏழை எளியவர்களுக் காகவும், வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இதற்கு அரசாங்கத்தார் உதவியளித்தனர். மற்றபடி வீடுகள் கட்ட முக்கியமாக வேண்டிய ஓடுகள், மரம் முதலியவை கள் நூற்றுக்கணக்கான நபர்களுக்கு இலவசமாக வழங் கப்பட்டன.

'காயத்ரி நகர்' என்று பெயரிடப்பட்ட ஒரு புதிய வாசஸ்தலம், தர்மஸ்தலத்திற்கும் பாஹுபலி விஹாருக்கு சமீபத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. யாத்ரீகர்கள் தங்குவதற்காக பெரிய சத்திரம் ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது.

சாமூகிக தர்ம கல்யாணங்கள் இங்கு நடத்தப்படு வதைப்பற்றி ஏற்கனவே 1974-ம் ஆண்டு வரை எழுதப் பட்டிருக்கிறது. அதன் பிறகு 1975-ம் ஆண்டில் 484 கல்யாணங்களும், 1976-ம் ஆண்டில் 426 கல்யாணங் களும், 1976-ம் ஆண்டில் 482 கல்யாணங்களும், 1978ம் ஆண்டில் 438 கல்யாணங்களும் ஆக 1972-ம் ஆண்டு முதல் இதுவரை 2430 கல்யாணங்கள் நடந்திருக்கின் றன என்பது போற்றத்தக்கது.

ரத்தினமானசா:—தர்மஸ்தலத்திற்கு அருகிலிருக்கும் உஜ்ஜிரே உயர்நிலைப்பள்ளியில் 'ரத்தினமானசா' என்ற விடுதியை ஆரம்பித்து மாணவர்களுக்கு விவசாயம் தோட்ட வேலைகள், பால் பண்ணை முதலியவைகளில் பயிற்சி கொடுத்து வரப்படுகிறது. மாணவர்களும் இதில் ஊக்கம் செலுத்தி இவைகளை நன்ருய் கற்றுவருகிருர்கள். இது எல்லோராலும் போற்றப்பட்டு வருகிறது.

மஞ்சு ஸ்ரீ பிரிண்டிங் பிரஸ் என்ற அச்சகத்தை எஸ். டி. ஆர். இ டிரஸ்ட் அவர்களால் உஜ்ரேயிலுள்ள எஸ். டி. ஆர். கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டு, மாணவர்களுக்கு, பிரிண்டிங், கம்போசிங், பைண்டிங் முதலியவைகளில் டிரெயினிங் அளிக்கப்பட்டு வருகிறது.

மங்களூரிலிருக்கும் பாரதீய வித்யாபவன் என்ற ஸ்தாபனத்திற்கு ரூபாய் 50,000 நன்கொடையாக கொடுக்கப்பட்டது.

உஜ்ஜிரேயிலிருக்கும் எஸ். டி. ஆர். கல்லூரிலும், தார்வாரிலிருக்கும் ஜனதா சிக்ஷண சமிதி-வித்யா ஸ்தாபனங்களிலும்-வித்யார்த்திகளுக்கு டைப்ரைடிங் ஷார்ட்டண்டு, சொல்லிக் கொடுப்பதுடன், பெண் மாணவிகளுக்கு தையல் வேலை, பொம்மை செய்தல், பிரம்பு வேலைகள் முதலியனவும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன் அவர்கள் தங்கள் ஜீவனத்தை நடத்த இவைகள் பயனளிப்பவைகளாயிருக்கின்றன.

அநேக நகரங்களிலும், ஊர்களிலும், உபன்யாசங்கள், காலக்ஷேபங்கள், சொற்பொழிவுகள் முதலியன செய்யவும், உபநயனம், கல்யாணம், வரவேற்புகள், மத சடங்குகள் முதலிய காரியங்கள் நடத்தவும் பொதுஜன உபயோகத்திற்காக தகுந்த கட்டிடங்கள் இல்லாததால்

இந்த குறையை தீர்த்து வைக்கும் வகையில் திரு. வீரேந்திர ஹெக்கடே அவர்கள் அநேக இடங்களில் தக்க நவீன வசதிகளடங்கிய 'கல்யாண மண்டபங்களை' கட்டியிருக்கிறார்கள். பத்ராவதியிலும் கனகபுரா தாலுக்காவிலுள்ள கல்லஹள்ளி என்ற இடத்திலும் 'கல்யாண மண்டபங்கள்' கட்டி 22-3-78ல் திறந்து வைக்கப்பட்டது. மைசூரிலும், பெங்களூர் நகரத்திலும் கல்யாண மண்டபங்களின் வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன.

தட்சிண கன்னடஜில்லாவில் அநேகர் க்ஷயரோகம் என்ற கொடிய வியாதியால் துன்பப்பட்டு வருகிறார்கள். சரியான வைத்திய சிகிச்சை அனுகூலங்கள் இல்லை. அதற்காக உஜ்ஜிரே என்ற ஊருக்கு சமீபத்திலிருக்கும் 'லைலா' என்ற இடத்தில் இலவச 'செனிடோரியம்' கட்ட ஏற்பாடாயிருக்கிறது. அதன் அஸ்திவாரக்கல்லை 10-3-1978ல் டெல்லி லோகசபை சபாநாயகரான திரு. கே. எஸ். ஹெக்கடே அவர்கள் மங்களமாக நாட்டினார் இன்னும் ஒரு வருடத்திற்குள் இதன் வேலை முடிவடைந்து விடும்.

ஹுப்ளி நகரிலிருக்கும் டாக்டர் ஆர். பி. பாட்டில் அவர்களின் 'புற்று நோய்' ஆராய்ச்சி ஸ்தாபனத்திற்கு ஒரு லட்சத்து அறுபதாயிரம் ரூபாய் நன்கொடையாக வழங்கப்பட்டது.

ஒன்னவர் என்ற ஊரிலிருக்கும் கல்லூரியை ஆர். பி. இ. சொசைடி அவர்கள் நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு 3 லட்ச ரூபாய் செலவில் ஒரு கட்டிடம் கட்டி அதற்கு நன்கொடையாக அளித்தார்.

திரு. ஹெக்கடே அவர்கள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களையும், தர்மங்களையும் பல வகைகளில் செய்ததற்கு மடாதிபதிகளும், பொது ஸ்தாபனங்களும்

அவருக்கு பட்டங்கள் வழங்கி கௌரவித்தன. அவை களாவன:— 1972ல் உடுபி அநுமார் மட சுவாமிகள் பரியாய மஹோற்சவ சமயம் 'தர்ம பூஷண' என்ற பட்டத்தை வழங்கினார்கள்.

1977ல் உத்திர பிரதேசத்திலுள்ள மதுரா என்ற ஊரில் அகில பாரத சாகித்திய வித்யாபீடம் 'வைஷ்ணவ மார்த்தாண்டா' என்ற பட்டத்தை வழங்கினார்கள்.

1977ல் ஸ்ரீ துவாராகா சாரதாபீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் ஸ்ரீ சங்கர ஜயந்தி சமயம் 'பரோபகார துரந்தரா' என்ற பட்டத்தை வழங்கினார்கள்.

1978ல் உடுப்பியிலிருக்கும் ஐந்து மடாதிபதிகள்— பரியாய மஹோற்சவ சமயம் 'சமாஜ ரத்தினம்' என்ற பட்டத்தை வழங்கினார்கள்.

திரு. வீரேந்திர ஹெக்கடே அவர்களின் பட்டாபிஷேக தசமான மஹோற்சவம் திரு. வீரேந்திர ஹெக்கடே அவர்கள் தர்மஸ்தல பீடாதிகாரிகளாக வந்து 24-10-78, பத்து வருடங்கள் பூர்த்தியானபடியால், இந்த தசமான மஹோற்சவத்தை உயர்ந்த முறையில் 4 நாட்கள் திருவிழாவாக கொண்டாடப்பட்டது.

பக்தர்களும், அபிமானிகளும், ஸ்ரீ தர்மஸ்தல க்ஷேத்திர வாசிகளும் சேர்ந்து, திரு. ஹெக்கடே அவர்கள் செய்து வரும் மாபெரும் சேவைக்கு நன்றி செலுத்தும் வகையில் இது கொண்டாடப்பட்டது.

இவ்விழாவை 21-10-78 மாலே கர்னடக அரசு முதல் மந்திரி திரு. டி. தேவராஜ அர்சு அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். 22-10-78, 23-10-78ல் அநேக வித்வத், சாகித்திய, தர்ம முதலிய கோஷ்டிகள் நடந்து

அதில் அநேக சுவாமிகளும், வித்வான்களும் பாகம் வகித்து சொற்பொழிவாற்றினர்கள். கடைசி தினமான 24-10-78ம் தேதி தான் பட்டாபிஷேக தினம் அன்று மாலை நடந்த வாழ்த்துக் கூட்டத்தில் அநேக லட்சாதிபதி களும், சுவாமிகளும், வித்தான்களும் திரு. ஹைக்கடே அவர்களுக்கு நல் வாழ்த்துக்கள் கூறி மலர் மாலைகள் அணிவித்து தங்கள் சந்தோஷத்தையும், அபிமானத்தை யும் தெரிவித்துக் கொண்டார்கள். அன்றைய வாழ்த்துக் கூட்டத்திற்கு சித்ரதுர்கா-பிருகன்மடம் ஸ்ரீமான் மகா ராஜா நிரஞ்சன ஜகத்குரு மல்லிகார்ஜுன முருக ராஜேந் திர மகாசுவாமிகள் அவர்கள் தலைமை வகித்து திரு. ஹெக்கடே அவர்களை பாராட்டி ஆசி கூறினர்கள்.

அதிக சிரத்தையுடனும், பக்தியுடனும், உதார மனோபாவனையுடன் அநேகவிதமான தர்ம காரியங்களைச் செய்து பத்து வருட காலத்தில் கீர்த்தியையும், புகழையும் பெற்ற திரு. வீரேந்திர ஹெக்கடே அவர்களுக்கு ஸ்ரீ மஞ்சுநாதசுவாமி, ஸ்ரீ சந்திரநாதசுவாமி, ஸ்ரீ க்ஷேத்திர தர்ம தேவதைகள், நீண்ட ஆயுளும், ஆரோக்கியமும். சகல சௌபாக்கியங்களும் அருள் செய்து இன்னும் அதிக மான சேவைகளை வெற்றிகரமாகச் செய்ய அவருக்கு எல்லாவிதமான உதவிகளையும் கிருபை செய்வார்களாக.

— மங்களம் —

ஶ்ரீ மஞ்சுநாதசுவாமி தேவாலயத்தில் சேவைகள் பூஜைகள் முதலியவைகளின் கால அட்டவணை

1. காலே 7 மணி முதல் 8 மணி வரையில்—
— தர்ம தரிசனம்

2. காலே 9 மணி முதல் 10-45 மணி வரையில்—
—சதருத்ராபிஷேகம், பஞ்சாமிர்த அபிஷேகம் க்ஷீராபிஷேகம்

3. காலே 10-45 மணி முதல் 11-30 மணி வரையில்
—குங்குமார்ச்சனை, பில்வார்ச்சனை முதலியன.

மஹா நைவேத்தியம்

4. காலே 11-30 மணி முதல் 1-30 வரையில்—
—காணிக்கை முதலியன சமர்ப்பித்தல் மற்ற சேவைகள், தர்ம தரிசனம்.

மஹா பூஜை

5. மாலே 7 மணி முதல் 8-30 மணி வரையில்—
— தரிசனம், மஹாபூஜை

குறிப்பு :— உற்சவ காலங்களிலும், மற்ற விசேஷ காலங்களிலும் மேற்கண்ட கால அட்டவணையில் மாறுதல் இருக்கும்.

shanmuga sunder printers
51/3, Sowrastrapet, Bangalore-56005

